Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
20 நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம்
கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk (சி-2014)
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 16 (09.01.2004) வெள்ளிக்கிழமை இதழ்:100

## போர் நிறுத்தத்திலிருந்து ரணில் விலகுவதானால்

# பிரதமர் பதவியை விட்டும் ரணில் விலக வேண்டும்!

## ஜே.வி.பி. விமல் வீரவன்ச கோரிக்கை

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னை விடுவித்துக்கொள்வது முறையற்றது. இவ்வாறு அவர் விலகிக்கொள்வதானால், பிரதமர் பதவியிலிருந்தும் விலகிக்கொள்ள வேண்டுமென்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச கேட்டுக்கொண்டார்.**

**கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது,**

போர் நிறுத்த உடன்பாட்டில் ஒரு தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த நிலையில் இருந்து விலகிச் செல்வது தனது பதவியில் இருந்து விலகிக் கொள்வது போன்றது.

பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று அமைச்சுக்களை தனது அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்கப்படாததைக் காரணம் காட்டி போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலக்கிக்கொள்ள பிரதமர் எடுத்துள்ள முடிவு எந்தவகையிலும் நியாயம் அற்றது.

இது பிரதமர் ரணில் புலிகளுடன் முரண்படாத வகையில் செயற்பட முனைவதையே காட்டுகின்றது. போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து பிரதமர் விலகிச் செல்வதை ஜே.வி.பி வன்மையாகக் கண்டிக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் வெளிப்படையாக இல்லை. அவர் விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட போர் நிறுத்த உடன்பாடு குறித்து பொதுமக்களுக்கு வெளிப்படையாக எதுவும் கூறப்படவில்லை.

நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு போர் நிறுதத

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மலசலகூடக் குழியிலிருந்து மனித எலும்புக்கூடு மீட்பு!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு, செபஸ்ரியார் கோயிலடிப்பகுதியில் உள்ள வீடொன்றின் மலசலகூடக் குழி ஒன்றிலிருந்து மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் வசிக்கும் மயில்வாகனம் யோகராஜா என்பவரது வீட்டின் மலசலகூடக் குழியை அவர் நேற்று சுத்தம் செய்தபோதே, குழியினுள் மனித எலும்புக்கூடு ஒன்று இருந்ததைக் கண்டுபிடித்தார்.

உடனடியாக அப்பகுதி கிராம சேவையாளரான பன்னீர்செல்வத்திடம் இவ்விடயம் குறித்து அறிவித்ததும் அவர் இது குறித்து யாழ்.பொலிஸாருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரத்தை பிரதமர் ரணிலிடம் வழங்கியது தவறு!

### ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

ஏழாயிரமாக இருந்த படை பலத்தை விடுதலைப் புலிகள் - தற்போதைய சமாதான காலத்தைப் பயன்படுத்தி பதினெண்ணாயிரமாக அதிகரித்துள்ளனர். இதன்மூலம் சமாதான காலத்தில் தமது படை பலத்தை பதினோராயிரத்தால் அவர்கள் அதிகரித்துள்ளனர்.

- இவ்வாறு சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள பாகிஸ்தான் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்திய செய்திநிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப் புலிகளின் இந்த துரித ஆட்சேர்ப்பு நடவடிக்கையை நோர்வேயின் அனுசரணையாளர்களால்கூட தடுத்துநிறுத்த முடியவில்லை. அத்துடன், விடுதலைப் புலிகள் புதிய பல பயிற்சி முகாம்களை திறந்துள்ளார்கள். இது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான செயலாகும். ஆனாலும், அவர்கள் அதனைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

பெருமளவு படையினரை விடுதலைப் புலிகள் கொன்று குவித்தனர். இவ்வளவையும் செய்த பின்னர் தற்போது, சிறிய மாறுதலுக்காக அவர்கள் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு!

(கொழும்பு)

திருகோணமலையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய புலி இயக்கப் போராளிகள் சம்பூரில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் ஊடாக, பயணம் செய்ததாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் இராணுவத்தரப்பு புகார் செய்திருக்கிறது.

இது தொடர்பாக, இராணுவப் பேசசாளர் ஒருவர் தகவல் வெளியிடுகையில்,

நேற்று முன்தினம் இரவு திருகோணமலை சம்பூரிலிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாக நூறுக்கு மேற்பட்ட புலிகள் பயணம் செய்தனர்.

புலிகள் அணியும் இராணுவ சீருடையுடனும், ரி-56 ரகத்துப்பாக்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் சகிதமாகவே இந்தப் பயணத்தை மேற்கொண்டனர்.

அரசுக்கும் புலிகளும் இடையிலான போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல் இதுவென்று அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## சமாதானத்தை முன்னெடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அவசியம்!

### ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சு அரசாங்கத்திடம் இருப்பது அவசியம் என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவரது பேட்டியில் மேலும்,

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழ் பாதுகாப்பு அமைச்சு சம்பந்தப்பட்ட சில விடயங்கள் குறித்து அவதானம் செலுத்துவது அவசியம்.

வடக்கு - கிழக்கில் இராணுவ முகாம்கள் எங்கெங்கு இருக்கவேண்டும் என்ற நிபந்தனைகள் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.


கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களினூடாக பயணம் செய்த சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டமைக்கு பாதுகாப்பு அமைச்சு அரசிடம் இருந்ததே காரணமாகும்.

விடுதலைப் புலிகள் கடற்பயணங்கள் மேற்கொண்டபோது அந்த இயக்கத்துடனும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் பாது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் பதுமன்-பிரட்ஸ்கர் மூதூரில் சந்தித்துப் பேச்சு!





(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் மற்றும் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் - சம்பூரிலுள்ள அரசியற்துறை மாநாட்டு மண்டபத்தில் நேற்று மதியம் ஒரு மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக சிநேகபூர்வமான கலந்துரையாடலை நடத்தியதாக மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் திருகோணமலை சென்ற தூதுவர் திருமலை செயலகத்தில் அரச சார்பற்ற பிரதிநிதிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் உட்பட பலதரப்பட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
(சி-2009) email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# கழிவுப்பொருட்களை தன்னிச்சையாக கண்ட இடங்களில் போடுவதைத் தவிர்க்கவும்

## யாழ். மாநகரசபை பொதுமக்களுக்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மாநகரசபை எல்லைக்குள் தினமும் சேரும் கழிவுப்பொருட்களைக் கொட்டுவதற்கென காக்கைதீவில் பிரத்தியேகமான காணியொன்று மிகநீண்ட காலத்திற்கு முன்னர் மாநகரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டு, அந்தக் காணிக்குள்ளேயே அன்றாடம் சேரும் கழிவுகள் போடப்பட்டு வருகின்றன.

இதனிடையே உடைந்த பீங்கான் துண்டுகள், சிகை அலங்கரிப்பு நிலையங்களில் சேரும் தலை முடிகள், உடைந்த கண்ணாடித் துண்டுகள், வாகனங்களின் பழுதடைந்த பகுதிகள், உதிரிப்பாகங்கள், தனியார் வைத்தியசாலைக் கழிவுகள், இறைச்சிக் கழிவுகள் போன்றன ஒழுங்கற்ற முறையில் மேற்படி காணிக்குள் பொதுமக்களினால் போடப்படுவதனால், சபை வாகனங்கள், காணியின் பின்பகுதிக்குச் சென்று கழிவுப்பொருட்களைக் கொட்ட முடியாது இருப்பதோடு, வீதிப்போக்குவரத்திற்கு இடையூறாகவும், சுகாதார சீர்கேடும், துர்நாற்றமும் ஏற்படுவதும் அதிகரித்துள்ளது.

கழிவுகளை அகற்றுவதற்கும், கழிவுகளைக் கொட்டும் இடத்தினை ஒழுங்காக பராமரிக்கவும், பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகிறது.

எனவே, மேற்குறித்த கழிவுகளைத் தன்னிச்சையாகக் கொண்டு சென்று கண்டகண்ட இடங்களில் போடுவதைத் தவிர்த்து, மாநகர சபையின் பொதுச்சுகாதாரப் பொறியியற் பிரிவினருடன் தொடர்பு கொண்டு, அவற்றை சபை வாகனங்கள் மூலமாக அகற்றுமாறும், எதிர்காலத்தில் கழிவுகள் கொட்டும் இடத்திற்கு பாதுகாப்புவேலிகள் அமைத்து, காவலாளிகள் நியமிக்கப்பட இருப்பதால் மேற்படி நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் சபையுடன் ஒத்துழைக்குமாறும், மாநகரசபை மூலம் அல்லாது வேறுவிதத்தில் கழிவுகளை மேற்குறிப்பிட்ட இடத்தில் போடுவது தடைசெய்யப்பட்டுள்ளது எனவும், மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# கேணல் கிட்டு நினைவுநாளை முன்னிட்டு வைத்தியசாலைகளில் சிரமதானப் பணி

கேணல் கிட்டுவின் 17 ஆம் ஆண்டு நினைவு தினம் - மிகவும் உணர்வுபூர்வமாக யாழ். குடாவெங்கும் அனுஷ்டிக்கத் தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதன் முதற்கட்டமாக - ஒவ்வொரு கோட்டத்திலும் இயங்கி வரும் வைத்தியசாலை வளாகம் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்யப்படவுள்ளது.

ஜனவரி 12 ஆம் திகதி இந்தப் பணிகள் காலை 9 மணிக்கு அவ்வப் பகுதி வைத்தியசாலைகளில் ஆரம்பித்து வைக்கப்படும்.

தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள், பொது நிறுவனங்களின் பணியாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இந்தச் சிரமதானப் பணிகளை முன்னெடுக்குமாறு தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேவேளை மேற்குறிப்பிட்ட 12 ஆம் திகதி 9 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும் சிரமதானப் பணிகள் நடைபெறும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துரித கற்றல் செயற்திட்டம் இவ்வருடமும் தொடரும்!

(ஆழியவளை)

வன்னிப்பிரதேசத்தில் ஆரம்பப் பிரிவு வகுப்பு மாணவர்களுக்கு, ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த - துரித கற்றல் செயற்திட்டம இந்த வருடம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ஜி.ரி.இசற் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், கடந்த வருடம் வன்னிப்பிரதேசத்திலுள்ள 266 பாடசாலைகளில் இருந்து, 14750 மாணவர்கள் இனங்காணப்பட்டு, மாலை நேரங்களில் மேலதிக கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த மாணவர்களுக்கு ஜி.ரி. இசற் நிறுவனத்தினால் மதிய உணவும் வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட 730 ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுவந்தன.

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட 10 பாடசாலைகளும், பளைப்பிரதேசப் பாடசாலைகளும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (122)

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

வருமானம் குறைந்த குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் வழங்கப்படவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையம் - மாணவர் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் தொடர்ந்து ஆற்றிவரும் சேவையின் அடுத்த கட்டமாக, 2004 ஆம் ஆண்டுக்கான நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. சுமார் 250 மாணவர்கள் பாடசாலையிலிருந்தும், நலன்புரி நிலையத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தமது பெற்றோர்களுடன் நாளை காலை 10 மணிக்கு முன்னதாக யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# சுசில் சந்திரபால மக்கள் பிரதிநிகளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில்சந்திரபால - சமாதானத் திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தைபொங்கல் தினத்திற்கு முன்தினமான 14 ஆம் திகதியே, யாழ். ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

குடாநாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள், தேவைகள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளிடம் இராணுவத் தளபதி கேட்டறியவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையிலான மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினரே கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் நினைவு தினம்!

(யாழ்ப்பாணம்)

1974 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது, அரச படைகளின் வன்முறைகளால் படுகொலை செய்யப்பட்ட - உறவுகள் பதினொரு பேரின், 30 ஆம் ஆண்டு நினைவு நாள் நாளையாகும்.

இந்த நாளை அனைத்து தமிழ் மக்களும் நினைவுகூருமாறு தேசிய எழுச்சிப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பான நினைவுநாள் நிகழ்வு- நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு படுகொலை நடைபெற்ற யாழ். முற்றவெளியில் நினைவுக்கல் அமைக்கப்பட்ட இடத்தில் நடைபெறும்.

யாழ் - நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால், இந்த நிகழ்வில் அனைத்துப் பொது மக்களும், பொது நிறுவனங்களின் பணியாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு தேசிய எழுச்சிப் பேரவை கேட்டுள்ளது.

# நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட தண்டப்பணத்தின் மூலம் பிரதேச சபைகளுக்கு பல லட்சம் ரூபா வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நீதிமன்ற தண்டப் பணம் மூலம் - 5 பிரதேச சபைகளுக்கு 27 இலட்சத்து 89 ஆயிரத்து 719 ரூபா வழங்கப்பட்டுள்ளதாக, யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற வழக்கு விசாரணைகள் மீதான தீர்ப்பின்போது, மொத்தமாக 65 இலட்சத்து 89 ஆயிரத்து 147 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

தண்டப்பணம், பிணை வைப்புக்கள், நானாவித வைப்புக்கள், பிரதிபண்ணல் கட்டணங்கள் ஆகியன தொடர்பாகவே இந்தத் தொகை அறவிடப்பட்டுள்ளது. மேலும் கடந்த வருடம் அறிவிடப்பட்ட தண்டப் பணங்களை பிரதேச சபைகளுக்கு மீளளிப்பதற்காகவும், பிணைப்பணம் மற்றும் இதர கட்டணங்களை உரியவர்களுக்கு மீளளிப்பதற்காகவும் நீதி அமைச்சு செயலாளரிடம் இருந்து 53 இலட்சத்து 18 ஆயிரத்து 249 ரூபா பெறப்பட்டுள்ளது.

இந்த நிதியில் இருந்தே, யாழ். மாநகரசபை, நல்லூர் பிரதேசசபை, வலி.கிழக்கு பிரதேசசபை, வலி. தெற்கு பிரதேசசபை, வலி.தென்மேற்குப் பிரதேசசபை ஆகிய சபைகளுக்கு மேற்படி 27 இலட்சத்துக்கு மேற்பட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிணைப்பணம், நானாவித வைப்புக்கள், பிரதிபண்ணல் கட்டணங்கள் தொடர்பாக உரியவர்களுக்கு 25 இலட்சத்துக்கு மேற்பட்ட தொகை மீளளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

வருடாவருடம் அறவிடப்படும் தண்டப்பணங்களின் தொகை அதிகரித்துச் செல்வதாகவும், பிரதேச சபைகளுக்கு வழங்கப்படும் நிதி அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி, பராமரிப்பு போன்ற தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இலவச மருத்துவ முகாம்

கியுமெடிக்கா நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று பிற்பகல், 4.00 மணிக்கு மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ சேவையை உரிய முறையில் பயன்படுத்தி தமது நோய்களுக்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.கனகரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார். (24)

# சின்னஞ் சிறு செய்திகள்

## கலைஞர்கள் கௌரவிப்பு

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொங்கல் கதம்ப விழா எதிர்வரும் புதன்கிழமை மாலை தொடக்கம் இடம் பெறவுள்ளது.

இந்தக் கதம்ப நிகழ்வு இவ்வருடம் பொன்விழா நிகழ்வாக இடம் பெறவுள்ளதால், ஆரம்ப காலங்களில் கதம்ப விழாவில் பங்கேற்ற மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வாக இம்முறை இடம்பெறவுள்ளது. மேற்படி கௌரவிப்பு விழாவுக்கு, நிலையத் தலைவர் வ.வரதாபரன் தலைமை தாங்கவுள்ளார். (55)

## மாதாந்தக் கூட்டம்

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் காலை பத்து மணிக்கு கொட்டடியில் உள்ள சங்கத்தின் முன்னைய பணிமனையில் சங்கத் தலைவர் சே.கதிர்காமத்தம்பியின் தலைமையில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் சகலரையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

## பிரதேச செயலர் நியமனம்

நல்லூர் பிரதேச செயலகத்தில் புதிய பிரதேச செயலராக, திருமதி தெய்வேந்திரம் கடமையேற்றுள்ளார்.

இதற்கு முன் பிரதேச செயலாராகக் கடமைபுரிந்த எஸ்.முருகையா யாழ். செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்தே, மேற்படி புதிய செயலராக திருமதி தெய்வேந்திரம் கடந்த செவ்வாய்க் கிழமை தொடக்கம் கடமையேற்றுள்ளார்.

இதற்கு முன் இவர் வவுனியாவில் கடமைபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (55)

## உப தபாற்கந்தோர் பழைய இடத்தில்

அரியாலை உப தபாலகம் மீண்டும் பழைய இடத்தில் கடந்த வியாழன் தொடக்கம் இயங்கிவருகின்றது.

கடந்த 2000 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து கச்சேரி நல்லூர் வீதியிலும் பின்னர் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாகவும் இயங்கிவந்த மேற்படி தபாலகமே, தற்போது மாம்பழம் சந்தியிலுள்ள தனது சொந்த இடத்தில் இயங்கி வருகிறது. (55)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய LG WASHING MACHINE 5 Kg கொழும்பு விலையில் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0776116885
0776023930 (583)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது அயலைச் சேர்ந்த
M.நந்தகோபாலன்
வேலணை பிரதேச செயலராக நியமனம் பெற்றதையிட்டு வாழ்த்தி மேலும் பதவி உயர்வுகள் பெறவும் வீரகத்தி விநாயகரை வேண்டி ஆசி கூறுகின்றோம்.

வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம். வண்ணை (சி-2074) து.விவேகானந்தக் குருக்கள்

## கூறுவிலை விற்பனை (Sealed Tender)

வட பிராந்திய போக்குவரத்துச்சபை – யாழ். சாலை

வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் பேருந்துகளிலிருந்து கழிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் கூறுவிலை விற்பனைக்காக யாழ். சாலையில் விடப்பட்டுள்ளன.

இப் பொருட்களை கொள்வனவு செய்யவிரும்புவோர் வட பிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக் காரியாலயம், பலாலி வீதி, கோண்டாவிலுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
கூறுவிலைச் சபை,
வ.பி.போ.சபை, கோண்டாவில்
(சி-2075)

## ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்
ராஜ்கிரன், ஸ்ரீ, கருணாஸ் நடித்த
**கொஞ்சிப் பேசலாம்**
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்)
(சி-2005)

## நிரஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
விஜய், ஜோதிகா நடித்த
**குஷி**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)

## வாழ்த்துகின்றோம்



யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் அதிபர்
உயர் திரு.
சுந்தரம் சிவபாதசுந்தரம்
அவர்கள் அகில இலங்கைச் சமாதான நீதிவானாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதை இட்டு மனமகிழ்வடைந்து அவரது மெய், வாய் தூய்மைப்பணி மேலும் சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.

யா/நாயன்மார்கட்டு ம.வி. யாழ்ப்பாணம். (584)
நண்பர்கள் பாடசாலை சமூகத்தினர்.

# தேசிய கல்விக்கொள்கையில் தமிழ்மொழிக்கு உரிய இடமில்லை

## புள்ளி விபரங்கள்மூலம் தெரியவருகிறது

(கொழும்பு)

தேசிய கல்விக் கட்டமைப்பில் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் டி.சரவணபவானந்தனால் கல்வி அமைச்சின் புள்ளிவிபரங்களை ஆதாரமாகக்கொண்டு தயாரித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் கட்டமைப்பில் தமிழ்மொழிக்கு உரிய இடமில்லாத காரணத்தால், தமிழ்க் கல்விமுறையொன்று உருவாக்கப்படவேண்டும். இல்லையேல் தமிழர்களின் கல்வி எதிர்காலத்தில் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது . நாட்டில் நிலவுகின்ற அதிபர் வெற்றிடங்களைப் பொறுத்தவரையில் 6943 சிங்கள மொழிப் பாடசாலைகளில், 7878 சிங்கள மொழிமூல அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 2130 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில், 1830 தமிழ் அதிபர்கள் கடமையாற்றுகின்றனர். 756 முஸ்லிம் பாடசாலைகளில், 894 முஸ்லிம் அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

300 தமிழ்மொழிமூல பாடசாலை அதிபர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற அதேநேரம், சிங்கள மொழியில் 535 பேரும், முஸ்லிம் பாடசாலைகளில் 130 பேரும் மேலதிகமாக உள்ளனர்.

மாணவர்களுக்குரிய ஆசிரியர் எண்ணிக்கையில், சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் 20 பேருக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலும், முஸ்லிம் பாடசாலைகளில் 24 பேருக்கு ஒன்று என்ற அடிப்படையிலும், தமிழ்மொழிமூல பாடசாலைகளில் 29 பேருக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலும் காணப்படுகின்றது.

தமிழ் ஆசிரியர்கள் வெற்றிடம் மிகமோசமான நிலையில் உள்ளதாகவும் -

101222 தமிழ் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்ற அதேவேளை, சிங்கள மொழியில் 6204 பேர் மேலதிகமாக உள்ளனர். தமிழ் ஆசிரியர்களின் ஆளணி மிகமோசமானதாகவே உள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 120 சிங்களவர்களும், 03 தமிழர்களும், 05 முஸ்லிம்களும் கடமையாற்றுகின்றனர்.

இலங்கை கல்வி நிர்வாகத் தரம் மூன்றில் 97 சிங்களவர்களும், 07 தமிழர்களும், 10 முஸ்லிம்களும் கடமையாற்றுகின்றனர்.

கல்வி அமைச்சு, பாடசாலைக் கல்வி அமைச்சு, மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனங்களின் ஆளணி நிர்வாகம், பௌதீக வளங்கள் என்பவற்றினை பகிர்ந்தளிப்பதில் பராபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தீர்மானம் மேற்கொள்ளும் அலுவலர்களில் தமிழர்கள் எவருமே இல்லை. தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் மட்டத்தில் ஒரே ஒரு தமிழர் மாத்திரமே உள்ளார். அவரும் சிரேஷ்ட முகாமைத்துவ நிர்வாகத்தில் உள்ளடக்கப்படவில்லை.

கல்வி அமைச்சில் உள்ள கல்விசாரா ஊழியர்களில் - தமிழர்கள் 02 பேரும், முஸ்லிம்கள் 13 பேரும் உள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் உள்ள ஆளணிப்பற்றாக்குறை காரணமாக பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்வப் பணிப்பாளர் பதவிகளில் ஒப்பந்த அடிப்படையிலும், ஆசிரியர் சேவை, அதிபர் சேவையில் உள்ளவர்களும் பதில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை கல்விச்சேவை அலுவல்களில் தரம் ஒன்றில் நாடளாவிய ரீதியில் தமிழர் ஒருவரே உள்ளார்.

அமைச்சின் கூட்டங்கள் கருத்தரங்குகள் தமிழில் நடத்தப்படுவது இல்லை.

வடக்கு - கிழக்கில் அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சிகளை நடத்துவதற்கான வலயங்களைச் சேர்ந்த வளவாளர்களுக்கான பயிற்சியும், கலைத்திட்டத் தயாரிப்பும் தேசிய கல்வி நிறுவகத்தில் சிங்கள வளவாளர்களுக்கு சிங்கள மொழியில் நடத்தப்பட்டது. தமிழ் வளவாளர்களுக்கு ஆங்கில மொழியிலேயே நடாத்தப்பட்டது.

தேசிய கல்வி நிறுவகத்தில் சில பாடங்களுக்கான கைந்நூல்கள் தமிழில் வெளியிடப்படவில்லை. இதனால் தமிழ்மொழிமூல ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, ஆளனி சமமின்மை உடனடியாகத் தீர்த்துவைக்கப்படவேண்டும். கல்வி அமைச்சு கல்வித் திணைக்களத்தின் தீர்மானிக்கக் கூடிய அலுவலர்கள் மட்டத்தில் தமிழர்கள் நியமிக்கப்படவேண்டும். தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சுக்களில் தனியான தமிழ்ப்பிரிவும், வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் பிராந்திய தமிழ் கல்வி நிறுவகமும் அமைக்கப்படவேண்டும் என தமிழர் ஆசிரியர் சங்க அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (01)

### கண்ணிவெடியகற்ற மேலும் 40 பேர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவில் மேலும் 40 பேர் பயிற்சிகளை முடித்துள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அங்கமாக இயங்கும் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பிரிவு மட்டக்களப்பிலுள்ள கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருகிறது.

இதற்கு உதவியாக 40 புதிய கண்ணிவெடி அகற்றும் பயிற்சியாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்தப் பணியில் ஈடுபடுத்தி வருகிறது.

### சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவிக்கான தேர்தல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட கிளையின் செயலாளர் பதவிக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஜே.வி.பி.யுடன் கூட்டு அமைக்கப்படவேண்டும் என்று அதற்கு ஆதரவு தெரிவிக்கும் மேர்வின் சில்வாவும், ஜே.வி.பியுடனான கூட்டை எதிர்க்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தன கத்தரி ஆராய்ச்சியும் இந்தப் பதவிக்காகப் போட்டியிடுகின்றனர். இந்த வாக்கெடுப்பில் வாக்களிப்பதற்கு 38 பேர் தகுதி பெற்றிருக்கின்றனர். எதிர்வரும் 12 ஆம் திகதி இந்த தேர்தல் நடைபெறவுள்ளது.

(01)

## அமெரிக்காவை மீண்டும் ஜே.வி.பி கண்டிக்கிறது!

(கொழும்பு)

அமெரிக்க நிலைப்பாடு குறித்து, ஜே.வி.பி. இரண்டாவது முறையாகவும் தனது கண்டனத்தினைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெயியுறவுத்துறைச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ், வெளியுறவுச் செயலர் கொலின் பவல் ஆகியோர் இலங்கையின் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப்போயுள்ளமைக்கு, ஜனாதிபதியின் செயற்பாடுகளே காரணம் எனத் தெரிவித்து, தமது காட்டமான கருத்தினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனைக் கண்டித்தே ஜே.வி.பி. கடந்தவாரம் கருத்து வெளியிட்டிருந்தது. அதேபோன்றதொரு கருத்தினை நேற்றும் அது வெளியிட்டுள்ளது.

அந்தக் கருத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் அமெரிக்கா தலையிட முடியாது. அதற்கான உரிமை அதற்குக் கிடையாது.

இலங்கை உள்நாட்டு விவகாரத்தை இலங்கை மக்களே தீர்மானிக்கவேண்டும் வெளிச்சக்திகள் அல்ல. இந்தநாட்டு மக்கள் தமது ஆட்சியாளரைத் தாமே தெரிவு செய்யவேண்டும். தவிர அமெரிக்காவோ வேறு நாடுகளோ அல்ல.

அரசு வெளிநாட்டுச் சக்திகளைப் பயன்படுத்தி, பயமுறுத்தல் மூலம் நாட்டைப் பிரிக்கவோ, விற்கவோ முயல்வது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாத விடயம் எனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

## இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி இணக்கப்பாடு

இனப்பிரச்சினைத் தீர்வில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணக்கப்பாடொன்றுக்குவரும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடனான எந்தவொரு உடன்படிக்கையைச் செய்வதாக இருந்தாலும், இது மக்களின் கருத்துக்கணிப்புடனேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் தீர்மானிக்கப்படுகிறது.

அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அதிகாரங்களைப் பகிர்வதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சற்றுத் தாராளமாகவே உள்ளதுடன் ஜே.வி.பி ஒரு வரையறையுடனேயே செயற்பட்டு வந்தது. இதனால், இருகட்சிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் அடிக்கடி தடைப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இரண்டு கட்சிகளுக்குமிடையில் இறுதியான ஒப்பந்தம் குறித்து பாகிஸ்தானில் நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி நாடு திரும்பியதும் முடிவெடுப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தமாத இறுதிக்குள் இரு கட்சிகளுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டுமென ஜே.வி.பி வலியுறுத்தும் அதேவேளை, தற்போதுள்ள அரசாங்கத்தினைக் கலைத்து காபந்து அரசொன்றை உருவாக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது. ஆனால், மக்களின் கருத்தினை அறிய மாகாணசபைத் தேர்தலையே முதலில் நடத்த வேண்டுமென சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

### வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் பொன்வண்ணன் இயக்கிய நதிக்கரையினிலே என்ற தமிழ்த் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது. இதன்போது எழுத்தாளர் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் கலந்துரையாடலும் இடம்பெறும்.

## செங்கட்டித் தொழிற்சாலையில் வேலைசெய்த 30 தமிழ்த் தொழிலாளர்களை முஸ்லிம் ஆயுதக்குழு தாக்கியது

முஸ்லிம்கள் நான்கு பேருக்கு சொந்தமான தொழிற்சாலை ஒன்றில் வேலைசெய்த 30 தமிழ் தொழிலாளர்கள் முஸ்லிம் ஆயுதக் குழுவினால் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டத்தின் வீரமுனை என்ற இடத்திலுள்ள நைனாகாடு என்ற பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

இந்தத் தொழிற்சாலையில் தமிழ்த் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, திடீரென தொழிற்சாலைக்குள் நுழைந்த முஸ்லிம் ஆயுததாரிகள் அங்கிருந்த தமிழ் தொழிலாளர்களை ஒடுமாறு பணித்தனர்.

அத்துடன் அங்கு வேலைசெய்யும் அனைவரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனவும், இவர்களைத் தொடர்ந்தும் வேலை செய்யவிட்டால் இந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் கடும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் எச்சரித்தனர்.

தமிழ் பொதுமக்கள் மீதான முஸ்லிம்களின் அச்சுறுத்தல் அதிகரித்திருப்பதனையே இது காட்டுகின்றதென அம்பாறை மாவட்ட மக்கள் தெரிவித்தனர்.

## மதரீதியான பதற்றநிலை கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணையாளர் ஒருவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள மதரீதியான பதற்றநிலையை - கண்காணித்து அறிக்கை தயாரிப்பதற்காக மனித உரிமை ஆணைக்குழு விசாரணையாளர் ஒருவரை நியமித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினரான ஆர். கே.டபிள்யூ.குணசேகர இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் இவரிடமிருந்து மதரீதியான பதற்றநிலைகுறித்த அறிக்கையொன்றைக் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விசாரணை அறிக்கையின் ஒரு பிரதி அரசிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் மதரீதியான வன்முறைகள் ஏற்படுகின்ற சூழலில், அதனைச் சமாளிப்பது தொடர்பான பரிந்துரைகளையும் இந்த அறிக்கை உள்ளடக்கியிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது!

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக - 2004ம் ஆண்டு தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்களை வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கல்வி மனிதவள கலாசார அமைச்சு கோரியுள்ளது.

தற்போது சேவையிலுள்ள நிரந்தர ஆசிரியர்களில் மாகாண அரச சேவை, மத்திய அரச சேவைகளில் உள்ளோர் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கலாம். ஆசிரிய கலாசாலைகளிலுள்ள பயிற்சி ஆசிரியர்களும், பயிலுநர் ஆசிரியர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியாது. தகுதியான ஆசிரியர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி, மனிதவள அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

### கேணல் கிட்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வங்கக்கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டு உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள்தற்போது இடம்பெறுகின்றன.

பிரதான நிகழ்வுகள் தீருவிலில் கேணல் கிட்டு நினைவாலயத்தில் இடம்பெறும். விசேட நிகழ்வு முத்திரைச் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள கிட்டு நினைவுப் பூங்காவில் இடம்பெறுமென ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

## தமிழ்த் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதற்கும் எமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை!

### முஸ்லிம் சமுகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சம்மாந்துறை நைனா காட்டில் தமிழர்களுக்கு எதிராகக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதற்கும் முஸ்லிங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என அப்பிரதேச முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

நைனா காட்டில் அமைந்துள்ள செங்கல் உற்பத்தித் தொழிற்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற ஆயுதக்குழுவினர், அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழர்களை அச்சுறுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து இந்தத் தமிழர்களுக்கு வேலைவழங்கிய முஸ்லிம் உற்பத்தியாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றதை உறுதிப்படுத்திய குறிப்பிட்ட முஸ்லிம் பிரதிநிதிகள், இங்கு தமிழ் - முஸ்லிம் மக்களிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில் மாற்று ஆயுதக்குழுவின் வேலையாக இது இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டனர்.

# நெடுந்தீவு பிரதேச கழகங்களுக்கிடையிலான 2004 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான- 2004 ஆம் ஆண்டுக்குரிய விளையாட்டு நிகழ்வுகள் கடந்த 03 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

03 ஆம் திகதி நடைபெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான தனியான கிரிக்கெட் போட்டியில், முதலாம் இடத்தினை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் தனதாக்கிக் கொண்டதுடன், தொடர்ந்து 03 ஆண்டுகளாக இடம்பெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டமையால்; இந்த வருடம் சொந்தமாக ஒரு வெற்றிக் கிண்ணத்தை உதய சூரியன் விளையாட்டுக்கழக ஆண்கள் அணி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் ஆண், பெண் அணிகளின் போட்டியில் - முறையே சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழகமும் முறையே இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டன.

இதேவேளை - 2 ஆவது நாள் நிகழ்வாக 04 ஆம் திகதி இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டியில்- சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டதுடன், இரண்டாம் இடத்தினை முறையே உதயசூரியன் விளையாட்டுக் கழகமும், ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதி உதைபந்தாட்டப் போட்டியின்போது குறிக்கப்பட்ட நேரத்தினுள் எந்த அணியும் கோல்களை போடாமையால், தண்டனை உதை மூலம் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை, சென் ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் 3 : 2 கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

05 ஆம் திகதி நடைபெற்ற எல்லே போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்குமான இறுதிப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், ஸ்ரார் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. பெண்களுக்கான போட்டியின் புள்ளி சம அளவில் இருந்தமையால் நாணய சுழற்சி மூலமே உதய சூரியன் விளையாட்டுக்கழக பெண்கள் அணி வெற்றியீட்டிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (113)

# யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிக்கு இம்மாத நடுப்பகுதியில் தெரிவுப் போட்டி

## யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த மாத நடுப்பகுதியில் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணித் தெரிவு இடம்பெறுமென யாழ். செயலக விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்தார்.

மிகவிரைவில் தமிழீழ விளையாட்டு விழா இடம்பெறவுள்ளதால் அதில் பங்கு கொள்வதற்கான 30 பேர் கொண்ட அணி ஒன்று முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்டு பின்னர் தகுதியான அணியொன்று நிர்ணயிக்கப்படவுள்ளது.

இந்தத் தெரிவுகளில் பங்குகொள்பவர்கள் அந்தந்தப் பகுதிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள் மூலம் தொடர்புகொண்டு தெரிவுகளுக்கான போட்டியில் கலந்துகொள்ளமுடியும்.

யாழ். மாவட்டம் முழுவதிலும் உள்ள உதைபந்தாட்ட வீரர்களிலிருந்து சிறந்தவர்களைத் தெரிவுசெய்வதற்காக ஐந்துபேர் கொண்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களே இந்தத் தெரிவுகளை மேற்கொள்வர்.

இந்தத் தெரிவுப் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம், 18 ஆம், 20 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய மூன்று பகுதிகளில் இந்தத் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

மூன்று இடங்களிலும் இடம்பெறும் தெரிவுகளைத் தொடர்ந்து இறுதித் தேர்வுகள் இடம்பெற்று மாவட்ட அணி உருவாக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# விளையாட்டு

# மாவட்ட மட்டத்திலான மேசைப்பந்து சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட மட்டத்தில் பாடசாலைக்கு இடையிலான மேசைப்பந்து சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் இப்போட்டிகள் யாவும் யாழ். சுண்டிக்குளியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்கள் பெண்கள் இடையே 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியாகவே இவ்விரு தினங்களிலும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியின் முதற்சுற்றில் வேம்படி மகளிர் கல்லூரி அணி, சாவகச்சேரி இந்துக்கல்லூரியோடு மோதவுள்ளது. இந்தப்போட்டியில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

இந்தச் சுற்றில் இடம்பெறும் இரண்டாவது போட்டியில் - வரணி மகா வித்தியாலய அணியுடன் யூனியன் கல்லூரி அணி மோதவுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி, திருக்குடும்பக் கன்னியர் மடம் அணியோடு விளையாடவேண்டும். அவ்வாறு விளையாடி வெற்றி பெறும் அணி இறுதிப்போட்டிக்குச் செல்லும்.

13 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இந்தபோட்டிகள் யாவும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதேவேளை, யாழ் மாவட்ட மட்டத்தில் ஆண்களுக்கான, 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மட்டத்திலான மேசைப்பந்தாட்டப் போட்டி 14 ஆம் திகதி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டியின் முதல் சுற்றில் - வரணி மகா வித்தியாலயம், யூனியன் கல்லூரியை எதிர்த்து விளையாடவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணி இரண்டாவது சுற்றில் யாழ்.மத்திய கல்லூரியுடன் மோதும். இந்தப்போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப்போட்டிக்கு செல்லும்.

இந்தப்போட்டியின் முதல் சுற்றில் இரண்டாவது போட்டி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணிக்கும் இடையே நடைபெறவுள்ளது. இந்தப்போட்டியில் வெற்றிபெறும் அணி, இரண்டாவது சுற்றில் புனித பத்திரிசியார் அணிக்கிடையே நடைபெற்று, இறுதிப்போட்டியில் விளையாடும் அணி தீர்மானிக்கப்படும்.

இந்த தகவல்களை யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக்குழுவின் தலைவர் ப.விக்கினேஸ்வரன் அறியத்தந்துள்ளார்.

# பாடசாலைகளுக்கிடையிலான பற்மின்ரன் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு இடையிலான 'பற்மின்ரன்' சுற்றுப் போட்டியின் 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டிகள் சென். ஜோன்ஸ் அக்கடமியில் எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதல் போட்டியில் சிறிய புஷ்பம் மகளிர் அணி சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியுடன் மோதும். இப்போட்டியில் வெற்றிபெறும் அணி உடுவில் மான்ஸ் உடன் இரண்டாவது சுற்றில் விளையாடி அதில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டியில் பங்குபற்றும்.

முதல் சுற்றில் இரண்டாவது போட்டி திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கும் விக்டோறியாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெறும். முதல் சுற்றின் மூன்றாவது போட்டி வரணி மகா வித்தியாலய அணிக்கும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெறும்.

முதல் சுற்றின் முதல் போட்டியில் வெற்றிபெற்ற அணியும் இரண்டாவது போட்டியில் வெற்றிபெற்ற அணியும் இரண்டாவது சுற்றில் விளையாடவுள்ளன.

இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்ற அணிக்கும் முதலாவது சுற்றின் முதல் போட்டியில் வெற்றி அணிக்கும் இடையே இறுதிப் போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பட்மின்ரன் சுற்றுப்போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டிகள் சென். ஜோன்ஸ் அக்கடமியில் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியின் முதற் சுற்றில் முதல் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி அணியோடு விளையாடி அதில் வெற்றிபெறும் அணி இரண்டாவது சுற்றில் உடுவில் மான்ஸ் உடன் விளையாடும். இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி இறுதிப்போட்டியில் விளையாடும்.

முதல் சுற்றின் இரண்டாவது போட்டி வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்துக்கும் இடையில் நடைபெறும்.

முதல் சுற்றின் மூன்றாவது போட்டி வரணி மகா வித்தியாலயத்திற்கும் புனித பத்திரிசியார் அணிக்கும் இடையே நடைபெறும்.

முதல் சுற்றில் இரண்டாவது மூன்றாவது போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளுக்கு இடையே இரண்டாவது சுற்றுப்போட்டி இடம்பெற்று அதில் வெற்றிபெறும் அணி முதல் சுற்றில் முதலாவது போட்டியில் விளையாடி வெற்றிபெற்ற அணியுடன் இறுதிப்போட்டியில் விளையாடும்.

# முத்தரப்பு போட்டியில் நதன் பிரக்கன் நீக்கம்

இந்தியா, அவுஸ்திரேலியா, சிம்பாப்வே ஆகிய அணிகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டி இன்று முதல் நடக்கவுள்ளது.

முதல் ஆட்டத்தில் இந்திய - அவுஸ்திரேலியா அணிகள் பலப்பரீட்சை நடத்த இருக்கின்றன. இந்தப் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் நதன் பிரக்கன் நீக்கப்பட்டுள்ளார்.

சிட்னி டெஸ்ட் போட்டியில் களத்தடுப்பு செய்தபோது பிரக்கனுக்கு இடுப்பில் பிடிப்பு ஏற்பட்டது. இதனால், முத்தரப்பு கிரிக்கெட்டில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை அறிவித்தது. இவருக்குப் பதிலாக வில்லியம்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முதல் 4 ஆட்டங்களுக்குப் பின்னர் ஓய்வெடுக்க இருப்பதாக விக்கெட் கீப்பர் கில் கிறிஸ்ட் அறிவித்துள்ளார். காயமடைந்துள்ள மெக்ராத் ஒருநாள் கிரிக்கெட்டில் ஆடவில்லை. பிரெட்லி, கிலெஸ்பீ ஆகியோர்களும் காயத்திலிருந்து முழுமையாக குணம் அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பொடா மறு ஆய்வுக்குழுவுக்கு அதிகாரம் எதுவுமில்லையாம் !

## தமிழக அரசு மீண்டும் எதிர்ப்பு

பொடா சட்டத்தின் கீழ் வைகோ கைது செய்யப்பட்டுள்ளது பற்றி பொடா மறு ஆய்வுக்குழு விசாரணை நடத்த தமிழக அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பொடா மறு ஆய்வுக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்றும் தமிழக அரசு தெரிவித்து உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் ம.தி.மு.க. பிரமுகர்கள் 8 பேர் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து பொடா நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுவருகிறது.

பொடா சட்டத்தின் கீழ் வைகோ கைது செய்யப்பட்டுள்ளது பற்றி விசாரிக்க பொடா மறு ஆய்வுக் குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று குழுவிடம் தமிழ அரசு சார்பாக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றிப் பொடா மறு ஆய்வுக் குழு, தலைவர் சகாரியா தலைமையில் கூடி விசாரணை நடத்தியது. அப்போது தமிழக அரசு சார்பாக சி.எஸ்.வைத்தியநாதன் ஆஜராகி வாதாடினார். பொடா சட்டத்தின் கீழ் வைகோ மற்றும் நக்கீரன் கோபால் கைதுசெய்யப்பட்டிருப்பது பற்றி விசாரணை நடத்த பொடா மறு ஆய்வுக் குழுவுக்கு அதிகாரமில்லை என்று கூறி கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

வைகோ மற்றும் நக்கீரன் கோபால ஆகியோர் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இது பொலிஸார் சம்பந்தப்பட்டது. அதனால் பொடா மறுஆய்வுக்குழு இதில் தலையிட முடியாது ஏற்கனவே விளக்கம் கேட்டு மறுஆய்வுக்குழு அனுப்பிய அறிக்கைக்கு தமிழக அரசு பூர்வாங்க ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

குற்றம் பற்றி பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் அது பற்றி முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்வதைத் தவிர பொலிஸாருக்கு வேறுவழி இல்லை. மேலும் அந்தச் சூழ்நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு உள்ளதா அல்லது இல்லையா என்பதை முடிவுசெய்வதற்கும் எந்தச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்யலாம் என்று சொந்தமாக முடிவுசெய்ய சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு அதிகாரம் இல்லை. இந்த விஷயம் விசாரணை செய்யப்படவேண்டியது பின்னர் குற்றச்சாட்டு பதிவுசெய்யும்போது நீதிமன்றம் ஆய்வுசெய்யவேண்டிய விஷயம் என்று அரசு சார்பாக வழக்கறிஞர் வைத்தியநாதன் கூறினார்.

பொடா மறு ஆய்வுக்குழுவுக்கு விசாரணையை மாற்றி மறு ஆய்வு செய்யும் அதிகாரம் இல்லை. நிர்வாகம் சம்பந்தமாக வேண்டுமென்றால் மறு ஆய்வுசெய்யலாம். அதனால் வைகோ மற்றும் நக்கீரன் கோபால் பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட விஷயத்தை விட்டுவிடவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கடலூர் சிறையிலிருந்த நெடுமாறன் விடுதலை

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆற்று கடலூர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். இவர் விடுதலைப் புலிகளை ஆதரித்ததாக 2002 ஆம் ஆண்டு ஓகஸ்ட் பொடாவில் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் இவருக்கு பிணை வழங்கியது பின்னர் திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் பிணை கிடைத்தது. ஆனால், 1993 ஆம் ஆண்டில் காவியத் தலைவன் கிட்டு என்ற புலி ஆதரவுப் புத்தகத்தை வெளியிட்டதாக இவர் மீது போடப்பட்ட வழக்கு சென்னை ஆலந்தூர் நீதிமன்றத்தில் நடந்துவந்தது.

அதில் பிணை கோரி இவர் தாக்கல் செய்த மனு ஆலந்தூர் நீதிமன்றத்தில் நடந்தது. ஆனால், நீதிபதியை தமிழக அரசு திடீரென மாற்றியதால் பூந்தமல்லி நீதிமன்றத்தில் நெடுமாறன் மனுத்தாக்கல் செய்தார். அங்கு பிணை மறுக்கப்பட்டது.

இதையடுத்து செங்கல்பட்டு நீதிமன்றில் நெடுமாறன் மனு தாக்கல் செய்தார் இதை விசாரித்த நீதிபதி ராஜன் கடந்த செவ்வாய்க்கிழமை நெடுமாறனுக்கு பிணை வழங்கினார்.

ஆனால், நீதிமன்ற- சிறைத்துறை பார்மாலிட்டிகளைக் காட்டி நெடுமாறனை உடனடியாக விடுவிக்காமல் இழுத்தடித்த தமிழக அரசு நேற்றுக் காலை வேறு வழியின்றி அவரை கடலூர் சிறையில் இருந்து விடுவித்தது.

இருதய நோயாளியான நெடுமாறனை இந்த சிறைவாசம் மிகவும் தொல்லைப்படுத்திவிட்டது. குறிப்பிட்டதக்கது. சிறை உணவினால் வயிற்றுக்கோளாறாலும் அவர் பாதிக்கப்பட்டார். மேலும் பல உடல் உபாதைகளால் சிரமப்பட்டு வந்தார்.

## ஜனாதிபதியை சந்திக்க மீண்டும் முயற்சி

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போனவர்களின் நிலைமை தொடர்பாக - ஜனாதிபதியை சந்திப்பதற்கு வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மீண்டும் முயற்சிகளை எடுத்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக - ஜனாதிபதியைச் சந்திப்பதற்குச் செல்ல இருப்போரை தெரிவு செய்வதற்கான கூட்டமொன்று, இன்று காலை 10 மணியளவில் அன்னையர் முன்னணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் பல முக்கிய விடயங்களும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதால், தவறாது சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## திருமறைக்கலாமன்ற ஓவிய, சிற்பக் கண்காட்சி.

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றத்தின் ஓவியக் கலைவட்டம் நடத்தும் ஓவிய, சிற்பக் கண்காட்சிகள் - இன்று தொடக்கம் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன. றக்காவீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலாமுன்றலில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில் பலவிதமான ஓவியங்கள், சிற்பங்கள் என்பன காட்சிப்படுத்தப்படுத்தப்படவுள்ளன.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் கண்காட்சி - மாலை 5 மணி வரையும் நடைபெறமென திருமறைக் கலாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். இந்தக் கண்காட்சியை பார்வையிடும் பார்வையாளர்களிடையேயும் ஓவியப்போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. கண்காட்சித் திடலில் வைத்து வழங்கப்படும் தலையங்கத்திற்கு அமைவாக ஓவியங்களை வரைந்து கொடுத்தல் வேண்டும். தரமானவற்றிக்கு கண்காட்சியின் இறுதி நாளன்று நினைவுப் பரிசு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## புதிய பொலிஸ் நிலையம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம் வட்டாரம் மற்றும் நாவாந்துறைப் பிரதேசத்திற்காகப் புதிதாகப் பொலிஸ் நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கல்லூரி வீதி, நாவலா வீதிச் சந்தியில் சிறிய கடை ஒன்றில் மேற்படி பொலிஸ் நிலையம் இயங்கத்தொடங்கியுள்ளது.

அந்தப்பகுதியில் இராணுவப் படை காவலரண் ஒன்றுக்கு எதிராக - "பொலிஸ்நாவாந்துறை" என்ற பெயர் பலகையுடன் இது அமைந்துள்ளது. (206)

## நீரில் மூழ்கி வயோதிபர் மரணம்

நீரில் மூழ்கி முதியவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வாய்க்கால் நீரில் குளித்துக் கொண்டிருந்த சமயமே - இந்த முதியவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். வட்டக்கச்சி பத்து வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த குட்டி சுப்பிரமணியம் என்பவரே உயிரிழந்தவராவார்.

## வைரவர் ஆலயம் சிரமதானம்

கைதடி - நுணாவில் சந்தியில் அமைந்துள்ள வைரவர் ஆலயமொன்று அந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் சிரமதானம்மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் மிகவும் சேதமடைந்து பற்றைகள் மண்டியிருந்த இந்த ஆலய வளவு துப்பரவாக்கப்பட்டு தூய்மையாகவுள்ளது. (24)

## பொதுக்கூட்டம்

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலையில் பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கத்தின் பொதுக்கூட்டம்-நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. கந்தசாமிகோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், உறுபபினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கபட்டுள்ளது. இதன்போது புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறவுள்ளது. (ச)

# போரின் இழப்புக்களை ஈடுசெய்வதைக் காட்டிலும் சிதைந்த மனங்களை சீர்படுத்தவேண்டியது அவசியம்

### யாழ்.நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

போரினால் இழந்த இழப்புக்களை ஈடுசெய்வதை விட, போரினால் சிதைந்துபோயுள்ள மனங்களை சீர்படுத்தவேண்டியதே இன்றைய தேவையாகவுள்ளது என, யாழ். நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிறுவனப் பொருளாளர் ஸ்ரீதேவி ஞானரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஈஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்ற போரின் காரணமாக - எமது இனம் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளது. ஆனால், அவற்றை ஈடு செய்வதைக்காட்டிலும், போரினால் பாதிக்கப்பட்டுள்ள மனங்களின் சிதைவுகளை ஈடுசெய்வதே இன்று பாரிய பணியாக எம்முன் விரிந்துள்ளது.

குறிப்பாக - சிறுவர்களின் மனம் போரினால் மிகவும் பாதிப்படைந்துள்ளது. தாய், தந்தையரை இழந்து ஏராளமான சிறுவர்கள் எமது மண்ணிலே உள்ளார்கள். அவர்களுக்கு ஆதரவுகொடுத்து, காக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும்

எமது தேசியத்தலைவர் இந்த விடயத்திலே மிகவும் உறுதியாகவுள்ளார். வன்னிப் பெருநிலப்பரப்பிலே பல சிறுவர் இல்லங்களை அமைத்து, ஆதரவற்ற சிறுவர்களை பாதுகாத்து வருகின்றார். அந்த முன் மாதிரியை, சமூக அமைப்புக்களும் பின்பற்றிச் செயற்படவேண்டும்.

அந்த வகையில், இந்த அறக் கொடை நிலையத்தை நடாத்தும் தியாகேந்திரன் பாராட்டப்பட வேண்டியவர்.

இன்று எமது உறவுகளிலே ஏராளமானவர்கள் - பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். இவர்கள் அங்கு தமது தீவிர உழைப்பின்மூலம், மிகப்பெரிய செல்வந்தர்களாகவுள்ளார்கள். தற்போது நிலவும் தற்காலிக சமாதானச் சூழல் நிரந்தரமாக மாறும்போது, அவர்கள் அனைவரும் எமது தாய் மண்ணுக்கு வந்து, இங்கே தமது பணத்தை முதலிட்டு, எமது பொருளாதாரத்தை உயர்த்துவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதற்கு எமது இயக்கம் தன்னாலான முழுமையான பங்களிப்பை நல்கும்.

தென்னிலங்கையில், நிலவிவரும் அரசியல் போட்டிகள் - சமாதானம் மூலம் எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமெனும் எதிர்பார்ப்பைக் கேள்விக் குறியாகியுள்ளன. நாம் சமாதானத்திலே பற்றுதியாகவே உள்ளோம். யுத்த நிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடிப்பதன்மூலம், எமது தேசியத்தலைவர் உலகிற்குப் புதியதொரு ஜனநாயகத்தைப் பரிணமித்துக் காட்டிக் கொண்டுள்ளார்.

சிறந்ததொரு தலைமைத்துவம் எமக்குக் கிடைத்துள்ள இந்த வேளையைப் பயன்படுத்தி, நாம் விடிவை பெற்றுக்கொள்ளவேண்டும். தமிழர்களின் திறமையையும், தன்மையையும் உலகம் இன்று நன்றாக உணர்ந்து கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் - பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரச ஊழியர் சிலரின் இடமாற்றங்கள் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கிடையில் இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் சிலரின் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டச் செயலகத்திலிருந்து பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றப்பட்டிருந்த கே.நடராசா, ரி.கலைச்செல்வன், எஸ்.ஸ்கந்தவரோதயன் ஆகியோரதும், பிரதேச செயலகத்திலிருந்து பிரதேச செயலகத்திற்கு மாற்றப்பட்டிருந்த கே.கௌரிதேவி, கே.பத்மாஜினி, திருமதி எஸ்.ஜெகமோகன், எம்.வசந்தி ஆகியோரதும் இடமாற்றங்கள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை - யாழ்.மாவட்டச் செயலகக் களஞ்சியக்காப்பாளராக இருந்த ச.சீவரட்ணம், கம்பனியில் புதிதாக செயற்படுத்தப்படவிருக்கும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு உப அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (24)

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய சிறார்களுக்கு போலியோ சொட்டு மருந்து

### சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சு தகவல்

(கொழும்பு)

இந்தியாவில் தங்கியிருந்துவிட்டு, நாடுதிரும்பியுள்ள சகல சிறாரகளுக்கும் போலியோ சொட்டுமருந்து வழங்கப்படும் என, சுகாதார போஷாக்கு நலன்புரி அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப்பிரிவின் தெரிவித்துள்ளனர்.

போலியோ நோயை உலகத்திலிருந்து முற்றாக ஒழித்தல் என்னும் குறிக்கோளுடன் செயற்பட்டுவரும் உலக சகாதார நிறுவனம், வடக்கு-கிழக்கிலுள்ள 5 வயதிற்குட்பட்ட சகல சிறுவர்களுக்கும் போலியோ சொட்டுமருந்தை வழங்கியுள்ளது.

கடந்த எட்டுவருடங்களாக இது ஒழுங்காக வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் - இந்தியாவிலிருந்து இலங்கைவரும் சிறுவர்களினூடாக போலியோ பரவலாம் என்ற அச்சம் காரணமாக, இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியேறியவர்கள், தத்தமது சுகாதாரப்பகுதிப் பொறுப்பதிகாரிகளினூடாக போலியோ சொட்டு மருந்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைத் தத்தமது பகுதி சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள்மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவட்டச் செயலக, பிரதேச செயலக கணக்காளர்கள் உள்ளக இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கணக்காளர்கள், அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் உள்ளக இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதன்படி - யாழ்.மாவட்டச் செயலகக் கணக்காளர் கே.கமலேஸ்வரன், மாவட்டச் செயலக கடமைகளுடன் கரவெட்டிப் பிரதேச செயலகக் கடமைகளையும் மேற்கொள்வார். கடமை விடுமுறையில் மேற்படிப்புக்காகச் சென்றிருந்தவர்களான - ஜே.எச்.குணம், கே.குகதாஸ ஆகியோர் முறையே - சாவகச்சேரி, யாழ்ப்பாணம் பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலகக் கணக்காளர் - யு.இராசேஸ்வரி சங்கானைக்கும், கரவெட்டிப் பிரதேச செயலகக் கணக்காளார் கே. யோகேந்திரன் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கும், சாவகச்சேரி பிரதேச செயலக கணக்காளர் எம்.வசந்தமாலா கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (24)

## துர்நாற்றம் வீசும் மலசலகூடத்தால் நோயாளர்கள் பெரும் பாதிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர்கள் விடுதியிலுள்ள மலசல கூடங்கள் சீரான முறையில் கழுவிச்சுத்தப்படுத்தாமையால் பெரும் துர்நாற்றம் வீசி, விடுதியிலுள்ள நோயாளர்களை பெரும் இம்சைக்குள்ளாக்குவதாக நோயாளர்கள் தரப்பாலும், அவர்களைப் பார்வையிடும், பொதுமகளாலும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

விடுதியில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை இந்த வைத்தியசாலையில் தற்போது குறைவாகவுள்ளது. அதேவேளை சுகாதாரத் தொழிலாளர்கள் பலருள்ள போதும இவ்வாறான நிலமை ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

சுகாதாரத்தைப் பேணவேண்டிய இடங்களில் இவ்வாறான ஏனோதானோ என்ற போக்கினால் வைத்தியசாலையை நாடிச்செல்லும் பலர் சுகாதாரச் சீர்கேட்டு நோயினால் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும் வாய்ப்புகள் உள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது. (113)

## ஒதியமலை அ.த.கலவன் பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கும்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒதியமலை அ.த.க பாடசாலை 20 வருடங்களின் பின்னர் தனது சொந்த இடத்தில் மீண்டும் இயங்கவுள்ளது.

1984 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர், ஒதியமலைப்பகுதி மக்களை 24 மணிநேரத்துக்குள் அங்கிருந்து வெளியேறுமாறு அறிவித்திருந்தனர்.

அந்தவேளை - ஒதியமலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்று, வள்ளிபுனப் பகுதியில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

தற்போது ஒதியமலைப்பிரதேசத்தில் மக்கள் குடியேறிவருவதால், இந்தப் பாடசாலையும் அங்கு செல்லவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதிமுதல் இந்தப் பாடசாலை அந்தப் பகுதியில் இயங்கவுள்ளமையானது அந்தப்பகுதி மக்களுக்குப் பெரிதும் பயனுடையதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நெடுங்கேணி வைத்தியசாலை புதிய கட்டட திறப்பு நிகழ்வு!

ஜெயசிகுறு படைநடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்ட நெடுங்கேணி வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு, எதிர்வரும் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

20 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கபட்ட வைத்தியசாலைக் கட்டடத்தை, சுகாதார அமைச்சின் செயலாளர் எதிர்வரும் 12 ஆம் திகதி திறந்துவைக்கவுள்ளார்.

அத்துடன், இந்த வைத்தியசாலைக்கென இரண்டரைக்கோடி ரூபா செலவில் கட்டப்படவுள்ள இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல்லும் அன்றைய தினமே நாட்டப்படவுள்ளது.

நெடுங்கேணி வைத்தியசாலையில் தற்போது திருத்தப்படாதுள்ள கட்டடத்தில் எதுவித அடிப்படை வசதிகளும் அற்றநிலையில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (03)




இரண்டாவது நாளாக நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக் கழக ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது ஊழியர்கள் பல்கலைக்கழக வாசலை மறித்து அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.



## சிநேகிதியே

# நல்லது கெட்டதை தேர்ந்தெடுக்கும் பக்குவத்தை சிறுவயதிலேயே பிள்ளைகளுக்குப் புகட்டவேண்டும்

*யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியையும், கவிதை, கட்டுரை, சிறுகதை எழுதுவதில் ஆர்வமுடையவருமான கௌரி கணேசலிங்கத்துடனான நேர்காணல்.*

நாம் கௌரி கணேசலிங்கத்தைச் சந்தித்தபோது, ஆசிரியருக்கு உரிய அமைதி அவரது முகத்தில் தெரிந்தது. அன்பான உபசரிப்போடு எங்களை வரவேற்றார்.



எங்களுடன் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டாா.

**உங்களது எழுத்துத்துறை தொடர்பான ஆற்றல் பற்றி கூறுங்கள் என்றபோது -**

80 ஆம் ஆண்டுக்கு முன்னர் வானொலி, பத்திரிகைகளில் நிறைய ஆக்கங்களை எழுதியுள்ளேன் மலேசியா, சிங்கப்பூர், லண்டன், போன்ற நாடுகளில் வெளிவரும் சஞ்சிகைகளில் தமிழில் பல ஆக்கங்களை எழுதியுள்ளேன். சமீபகாலமாக குடும்ப சூழ்நிலை காரணமாக எழுதுவதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளேன்

ஆனாலும், சமீபத்தில் நடைபெற்ற ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளேன்.

தற்பொழுது எழுதக்கூடிய ஆர்வமும், எழுதக்கூடிய மனச்சூழ்நிலையும் எனக்கு கிடைத்திருக்கிறது. என்றுதான் கூறவேண்டும் இனிமேல் தொடர்ந்து எழுதுகின்ற நோக்கம் உண்டு.

சாதாரணமாக பெண்ணினத்தை அடிப்படையாகக் கொண்ட கதை, கட்டுரைகள், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட இன உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகவே என்னுடைய எழுத்துக்கள் அமைந்திருக்கின்றன.

ஆரம்பத்தில் நானும் எனது கணவருமாக "மேகம்" என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தோம். 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை அது. அதில் பிரியா என்ற புனைபெயரில் நான் ஆக்கங்களை எழுதிவந்தேன். அதில் சீதனக் கொடுமையால் பெண்கள் வாழமுடியாமல் தவிப்பது பற்றியும், அவர்களுக்கு கைகொடுக்க வேணடிய அவசியம பற்றியும். பெண்களை அடக்கிவைக்கும் மூடநம்பிக்கைகள் பற்றியும் நான் நிறைய எழுதியுள்ளேன். வானொலிக்கும் - நாடகங்கள், கவிதைகள், கதைகள், முதலியவற்றை எழுதியுள்ளேன்.

நான் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னரேயே எழுத்துத்துறையில் ஈடுபட்டேன். என்னுடைய தகப்பனார் ஒரு தமிழ்ப் பண்டிதர் அவர் தந்த தமிழ்தான் எனக்கு உரமூட்டியது. என்று கூறலாம். இயற்கையாகவே எனக்கு தமிழில் ஆர்வமுண்டு, திசை தப்பியே விஞ்ஞான ஆசிரியராக வந்தேன் என்றுகூற முடியும். மலேசியாவில் செம்பருத்தி, அரும்பு, அருவி போன்ற பத்திரிகைகளில் என்னுடைய ஆக்கங்களை எழுதியுள்ளேன். அதுவும் யாராவது தெரிந்தவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலேயே தான் இவற்றை எழுதினேன்.

என்னுடைய கணவர் கணபதி கணேசன் தேவைக்கு ஏற்ப எழுதுபவர். அவருடைய மனைவி என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுகின்றேன். புலம்பெயர்ந்த நாடுகளில்- இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் தன்னுடைய எழுத்துத்துறை எந்தளவிற்கு ஈழத் தமிழர்களுக்கு உதவமுடியுமோ அந்தளவில் கால்பதித்தவர் எனத் தெரிவித்தவரிடம்

**கணவரின் பிரிவு பற்றிக் கேட்டபோது -**

பெண்கள் அழக்கூடாது. மகாராணிகள் அழுவதில்லை என்று எனது தந்தையார் எப்போதும் கூறுவார். எனது கணவன் என்னைத் திருமணம் செய்துகொண்ட பின்னர் ஒரு சில வருடங்களின் பின் வெளிநாடு சென்றுவிட்டார். அப்போது எனக்கு இரு குழந்தைகள் அவர்களைக் காப்பாற்றுவதற்கு ஆசிரியத் தொழில்தான் எனக்குக் கைகொடுத்தது என்னுடைய கணவர் நாட்டு சூழ்நிலை காரணமாகவே வெளிநாடு போயிருந்தார்.

துயரங்களை விளங்குகின்ற பக்குவம் எனக்கு சின்ன வய்தில் இருந்ததால் அவர் போன பின்னர்கூட குழந்தைகளை நானாக வளர்க்கின்ற ஒரு உறுதிப்பாடு இருந்தது அவரில்லாதபோதுகூட அவரின் உணர்வுகள் என்னோடு இணைந்திருந்தது.

**சிறந்தொரு சமூகம் உருவாகுவதற்கு சமூகத்தில் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் எனக் கேட்போது -**

தனிநபர் ஒருவர் பெற்றோருடைய ஆளுகைக்கு, கட்டுப்பட்டு, ஆசிரியர்கள் ஆளுகைக்குக் கட்டுப்பட்டு பின்னர் ஒரு சமூகத்தின் உயர்மட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டுத்தான் வாழ்க்கை நடத்துகின்றான். இந்த நிலையில் தனிநபர் செய்கின்ற குற்றங்கள் அவனுடையதல்ல. தனிநபரை ஆழ்பவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். பெற்றோர், ஆசிரியர், வழிகாட்டிகள் இதைச் செய்யவேண்டும்.

ஒரு காரியத்தை செய் என்பதை காட்டிலும், எது நல்லது எது கெட்டது என்பதை தேர்தெடுக்கும் பக்குவத்தைச் சிறுவர்களுக்கு வளர்கக வேண்டும்.

குடும்பம் - பிள்ளைக்கு எடுத்துக்காட்டான ஒன்றாக விளங்கவேண்டும். அன்பான அரவணைப்பான குடும்பமாக இருக்கவேண்டும் பிள்ளை நெருடலற்ற மனநிலையில் வாழக்கூடியதாக இருக்கவேண்டும்.

6 வயதில் பாடசாலைக்கு நுழையும் மாணவன் - 18 வயதில் பாடசாலையைவிட்டு வெளியேறுகின்றான். அதுவரையும் ஆசிரியர் அவர்களுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆசிரியத்தொழில் தனியே ஊதியத்துடன் சம்பந்தப்பட்ட தொழிலல்ல. உயிருள்ள இயந்திரங்களுடன், மன உணர்வுடன் தொடர்புள்ள வேலை. அர்ப்பணிப்பு நிறைந்ததாக அந்தத் தொழில் இருக்கவேண்டும்.

எல்லா மாணவனையும் ஒரு ஆசிரியர் டொக்ரராகவோ, என்ஜினியர் ஆகவோ, சட்டத்தரணியாக வேலை மாற்றமுடியாது. ஆனால், சமூதாயத்தில் ஒரு ஒழுக்கசீலனாக மாற்றிக் கொள்ளமுடியும் அதனை ஆசிரியர்கள் செய்யவேண்டும்.

மாணவர்களிடையேயுள்ள ஒழுக்கக் கேட்டுக்கு ஆசிரியர் சமூகம் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும். தெரிந்தோ தெரியாமலோ நாங்கள் பிழைவிட்டு இருக்கிறோம். அதை திருத்திச் செயற்படவேண்டும்.

பெண் பிள்ளைகளைப் பொறுத்தளவில் அவர்கள் மிகுந்த மனச்சிக்கலுடன் பாடசாலையில் இருப்பார்கள். அதனை ஆசிரியர்கள் புரிந்து செயற்படவேண்டும். மனச்சிக்கல் உள்ள பெண்ணுக்கு தண்டனைகொடுப்பதைக் காட்டிலும் அதற்கு அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பெண் பிள்ளைகளின் விடயத்தில் தாய்மார் மிகுந்த பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால், பெண் பிள்ளைகளுக்கு தாய்மார் எடுத்துக் காட்டாகவும், சிநேகிதியாகவும் இருக்கவேண்டும் பிள்ளைகளுடைய தாய்மார் கூடிய நேரத்தை செலவழிக்க வேண்டும். மன இறுக்கங்களை பிள்ளை பகிர்ந்துகொள்ள அது வழி அமைக்கும். வெளிநாட்டுக் கலாசாரங்கள் அங்கு வரும்போது, பிள்ளை முன்னேறும் விடயங்களில் முன்னேறவேண்டும். உடைகள் போடுவதில், நுனிநாக்கில் ஆங்கிலம் பேசுதல் என்பவற்றைவிட, பிள்ளையை முழுமையாக ஆங்கிலம் பேசுவதைத்தான் பிள்ளை செய்ய வேண்டும். ஒரு பிள்ளைக்கு நல்லது எது தீயது எது என்று தெரியவேண்டும்.

பெண்களுக்கு சில உரிமை வேண்டும் எனறு எல்லாம் சொல்கிறார்கள். ஆனால், பெண களுக்குத் தற்போது கூடுதலான உரிமைகள் உள்ளன. அவற்றை சரியாகப் பயன்படுத்தினால், நாம் நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து கொள்ளலாம்.

தற்போது இருப்பவர்களில் இளையவர்கள் வாழ்க்கையைவிட்டு தம்முடைய நிகழ்காலம் எப்படி இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள், செயற்படுகின்றனர். முன்பு இருந்தவர்கள் இளையவர்கள் வாழ்க்கையில் கவனம் செலுத்தினர். தற்போது இதனைச் செய்யவில்லை என்று குறை கூறுவபவர்கள்தான் உள்ளனர். அதனை எவ்வாறு செய்வது என்பதைச் சொல்லத் தெரியாதவர்களாக அவர்கள் உள்ளனர்.

பெண்கள் நிச்சயமாக ஒரு தொழிலைச் செய்யவேண்டும். குடும்பம் என்ற நிலையில் ஒரு ஆணுடன் அவள் இணைந்து இருக்க வேண்டியது அவசியம்.

பெண் ஆணைச் சார்ந்திருப்பதில் தப்பு எதுவும் இல்லை. மன திற்குரிய ஆறுதல் துணை ஆணிடம் இருந்து பெண்ணுக்கு தேவை. தொழிலைவிட படிப் பறிவு தேவை. குழந்தையின் பராமரிபபு தொடர்பாக உளவியல் அறிவுதேவை. வேலைக்குச் செல்லும் பெண்கள்- சரியாக ஒரு வேலையைத் திட்டமிட்டுச் செய்கின்ற பணியை உடையவர்களாக இருக்கின்றனர். வேலை செய்யும் இடத்தில் நல்ல நிர்வாக ஒழுங்கை கடைப் பிடிக்கிறார்கள்.


பெண்கள் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத தனித்துவமான நெறிகளைப் பின்பற்ற வேண்டும். எல்லோருக்கும் பயப்படாமல் இருக்கவேண்டும் என்பதல்ல. நிலத்தில் யாருக்கும் அஞ்சாமல் தன்னைத்தான் பண்படுததிக் கொண்டவகையில் ஒருவன் இருகக வேண்டும்.

ஒரு உயர்நிலையில்தான் நிமிர்ந்த ஞானச்செருக்கு இருக்கவேண்டும் என்பதில்லை எந்தத் துறையில் செயற்படுகிறாளோ அதில் முழுமை பெறவேண்டும் என்பதைத்தான் புதுமைப் பெண்ணாக பாரதியார் எதிர்பார்த்தது.

அவர் எதிர்பார்த்த புதுமைப்பெண்கள் உருவாகிக்கொண்டு வருகின்றார்கள் என்பது தான் என்னுடைய கருத்து இன்னும் காலம் அதற்கு பண்படுத்த வேண்டும்.

**நேர்காணல்:- பூ.நகுலன், தீபன்**

# இனிப்புப் பூரி



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கோதுமை மா | - 1/4 கிலோ |
| ரவை | - 50 கிராம் |
| சீனி | - 200 கிராம் |
| கஜு | - 100 கிராம் |
| ஏலக்காய் | - 5 |
| நெய் | - 5 தேக்கரண்டி |
| உப்பு | - சிறிதளவு |
| தேங்காய் எண்ணெய் | - 1/2 போத்தல் |

கோதுமை மா, ரவையையும் அரைத்து சுத்தம் செய்து அதனுள் உப்பு, சிறிதளவு, நீர் சேர்த்து நன்கு பிசைந்து ஒரு மணிநேரம் ஊற வைக்கவேண்டும். கஜுவை நெய்யில் வறுத்தெடுத்து, அத்துடன் ஏலக்காய் சேர்த்து, நீர்விட்டு மைபோல கரைத்து, மாவுடன் சேர்க்கவும். இந்த மாக்கலவையுடன் சீனியையும் கலந்து மீண்டும் நன்கு பிசைந்து கொள்ளவும். தாச்சியில் எண்ணெய் விட்டு நன்கு கொதித்ததும், மாக்கலவையைப் பூரிகளாகத் தட்டி, கொதிக்கும் எண்ணெய்க்குள் போடவும். பொன்னிறமாக பொரிந்ததும் எடுத்து பூரிகளின் மீது நெய்யைத் தெளித்துக் கொள்ளவும். இதுவே இனிப்புப் பூரி.

இந்த உணவானது, மாலை நேரச் சிற்றுண்டிக்கு ஏற்றதாகும். இதனை விருந்தினருக்கும் பரிமாறலாம். குழந்தைகள் இந்த இனிப்புப் பூரியை விரும்பிச் சாப்பிடுவார்கள்.

# அழகுபடுத்திக்கொள்வதில் பெண்கள் அதிக ஆர்வம்

இப்போது எல்லாம் பள்ளிகளிலும் அழகுக்கலை நிலையங்களிலும் விநோத உடை ஒப்பனைகளும், முக அலங்கார மற்றும் சிகை அலங்காரப் போட்டிகளும் நடத்துவது மிகவும் வரவேற்கின்ற விடயமாக இருக்கிறது. இதில் அனைவரும் ஆர்வம் செலுத்தத் தொடங்கி உள்ளார்கள். பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் இயற்யாகவே ஆர்வம் அதிகம் உள்ளது.



அதுவும் இன்றைய பாடசாலை மாணவிகளை எடுத்துக் கொண்டால் அவர்களும், முகமாற்றும் சிகை அலங்காரப் போட்டிகளில் தங்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தவும் மற்றும் புதிய ஆடம்பர முறைகளில் தங்களை வெவ்வேறு வகையில் அழகுபடுத்திக் கொள்ள அழகு நிலையங்களை அணுகுகிறார்கள். இப்போது பல்வேறு விதமான முக அலங்காரம் மற்றும் கூந்தல் அமைப்பு மற்றும் குழந்தைகளின் விருப்பத்திற்கேற்ப உதாரணமாக மணப் பெண் அலங்காரத்தில் பல்வேறு விதமான கலாசார பிரதிபலிப்புகள் பல்வேறு நாட்டின் நடை, உடை, பாவனைகள் ஆகியவையும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இதற்கு நாம் இப்போதுள்ள நவீன வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கணினி மூலம் ஒருவருக்கு என்ன விதமான முகஒப்பனை மற்றும் சிகை அலங்காரம் பொருந்தும் என்று ஒரு நிமிடத்தில் அறியக் கூடியதாகவுள்ளது.

இது மட்டுமல்லாமல் பள்ளிகளிலும் மாணவிகள் மற்றும் குழந்தைகள் தங்களை பல்வேறு விதமான வேடங்கள்போட அணுகுகிறார்கள். இதற்கு ஏற்றாற்போல் முக ஒப்பனை, சிகை அலங்காரமும் செய்யலாம். இதில் ஒரு சிலர் வீட்டிலேயே சாதாரணமான எளியமுறையில் ஒப்பனைகளைச் செய்யலாம். உதாரணமாக - இப்போது முருகன் வேடம் என்று எடுத்துக்கொண்டால, தேவையான உடையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வேல், கிரீடம் அனைத்தும் கடைகளிலேயே கிடைக்கின்றன. மற்றும் எளியதான ஒப்பனையாக இருந்தாலும் நிகழ்ச்சிக்கு தக்கவாறு ஒப்பனையைப் போட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம்.

பெண்களுக்குப் பொறுத்தவரையில் - நகை மோகம் அதிகம் இருக்கிறது. அவர்கள் 20 பவுண், 30 பவுண் சங்கிலிகளைக் கூட கழுத்தில் அணிந்துகொண்டு தினசரி வீட்டுவேலை, அலுவலக வேலைகளில் பரபரப்பாக ஈடுபடுகிறார்கள். இதனால் கழுத்தில் சங்கிலி உரசி கழுத்துப்பகுதியில் கருமை நிறம் அடைகின்றது. இதற்கு ஒரு மேசைக்கரண்டி தயிரை எடுத்து தினமும் கழுத்துப் பகுதியில் பூசி வந்தால் கருமை நிறம் மறையும். பெண்களில் பலருக்கு முதுகில் தேமல் படருகின்றது. பழைய காலத்தில் இதனை நீக்க பலவழிகளில் போராடுவார்கள். இப்போது, கண் இமைக்கும் நேரத்தில் வலியே இல்லாமல் நீக்கிவிடமுடியும். பின்புறமாக முதுகுப் புறத்தினை அழகுபடுத்துவது பெண்களுக்கு சற்று சிரமம்தான். இதனால், பின்புறத்தை அழகுபடுத்தாமலே விட்டுவிடக்கூடாது. இப்போதும் வெயில் காரணமாகவும் தூசுக்களாலும் பெண்களுக்கு சிறு கட்டிகளும், கறுப்பு, வெள்ளையுமான படைகளும் தோன்றுகின்றன.

பெண்களில் சிலர் தங்களை அழகுபடுத்திக் கொள்வார்கள் ஆர்வக்கோளாறால் இரசாயனத் தன்மைவாய்ந்த அழகுசாதனப் பொருட்களை உபயோகிக்கத் துணிந்து விடுகிறார்கள். இதனால், ஏற்படும் கெடுதல்கள் ஏராளம்.

# தவறான பிறப்புமுறை விளக்கங்களால் திசைமாறிப்போகும் குடும்பச் சூழல்

விஞ்ஞானமானது பல வியக்கத்தக்க சாதனைகளைக் கண்டுகொண்டாலும், அது சூழல் தத்துவத்துக்கு ஏற்ப தன்னைத் தயார்படுத்திக் கொண்டாலும், மக்களால் தமது பழமைவாத மூடக்கொள்கையி லிருந்தோ அல்லது தமது சந்தேகவாத சித்தாந்தத்திலிருந்தோ முற்றாக விடுபட முடிவதில்லை.

இந்த, முற்றாக விடுபடாத்தன்மை யானது, பல குடும்பங்களிலே, குடும்பவாதக் கோட்பாடுகளில் சிதைவையும், அன்புக்கு கட்டுப்பட்ட அடிமை நிலையினையும், அறிவுக்கெட்டாத சிந்தனைத் தொகுப்பின் எதேச்சாதிகாரப் போக்கினையும் தூண்டி விடுகின்றது.

இவ்வாறு, தூண்டப்பட்ட போக்கானது கணவன் - மனைவி, மாமியார், மருமகள்- மச்சாள் - மச்சான் என்ற உறவுகளுக் கிடையே பிளவுகளைத் தோற்றுவித்து விடுகின்றன.

இத்தகைய பிரிவுகளானது: தொடர் நடவடிக்கைகளால் ஏற்படும் சிந்தனை உந்துதலால், நிரந்தரமான ஓர் பிரிவு முறை யினை உண்டுபண்ணிவிடுகின்றன.

இத்தகைய பிரிவுகளில், மணவினைப் பிரிவுகளே சமூகத்தில் அதிகம் காணப் படுவதால், இந்த மணப்பிரிவானது, சமூகத் தில், பிரிவுபெற்று பெண்பால் சார்பாக மிகத்தாழ்வு நிலை சமூக அந்தஸ்தே கிடைக்கின்றது.

இது, இவர்கள் சார்பாகவரும் பிள் ளைகளின், எதிர்கால சமூக நிலையினை ஆழமாகப் பாதித்துவிடுகின்றது. இப்பாதிப் பானது இந்தச் சிறுவர்கள் தொடர்பான உளநிலையில், மென்முறை சார்ந்த போக் குகள் குறைவடைந்து சிதைவு முறைப் போக்ககள் அதிகரிக்கின்றன.

எனவே, இத்தகைய நிலைகளைத் தவிர்ப்பதற்காகவும், குடும்பநிலைச் சிதைவு களைக் குறைப்பதற்காகவும், பெற்றோர் தமது பிறப்புமுறை பற்றி விஞ்ஞான ரிதியான விளக்கங்களை தெளிவாக புரிந்து கொள்ளல் அவசியமாகும்.

எனவே இந்த வகையில், இன்று சமூகத்தில் புரையோடிப்போயுள்ள மரபு வாத சிந்தனைப் பிரிவுகளால் ஏற்படும் குடும்ப வாழ்வியல் சந்தேகங்களை விஞ் ஞான பெறுமதியுடன் விளக்குகின்றது. இந்தக் கட்டுரை.

இந்தக் கட்டுரையில் குடும்பவாழ்வு முறையில் ஏற்படும் சச்சரவுகளுக்கு முக்கி யத்துவம் கொடுத்து பின்வரும் பகுதிகள் விளங்கப்படவுள்ளன.

1. பால் பேதம்

தொடராக ஆணைப் பெறுதல் அல்லது பெண்ணைப் பெறுதல்.

இதற்கு யார் காரணம்? அப்பாவா? அம்மாவா,?

2. நிறபேதம்

கணவன் மனைவி இருவரும் கறுப்பாக இருக்க பிள்ளை சிவப்பாக இருத்தல் அல்லது இதற்குக் எதிர்மாறான தொழிற் பாடு.

இதற்கு என்ன காரணம்? பரம்பரை அலகா? அல்லது சந்ததிச் சுவடியா?


3. குழந்தைப் பேறு அற்ற மலட்டுத்தன்மை

இதற்கு எது காரணம்? விந்தா? முட் டையா?

என்பவற்றினை உள்ளடக்கிய மனிதப் பிறப்புமுறை விளக்கங்களை கொண்டதாக பின்வரும் தொடர் அமைகின்றது.

**பால்பேதம் (லிங்கநிர்ணயம்)**

குழந்தைகள் பிறக்கின்றபோது, அவை



ஒன்றில் ஆணாக அல்லது பெண்ணாக அமை கின்றன. இவ்வாறு அமைவதற்கு, மனித நிற மூர்த்தங்களில் காணப்படும் இரண்டு பால் நிறமூர்த்தங்கள் (Sex Chromosomes) காரண மாகும்.

இதில் ஒன்று நெடியது 'x' நிறமூர்த்தம் எனப்படும், மற்றது குறுகியது 'y' நிறமூர்த்தம் எனப்படும் ஏனைய 44 நிறமூர்த்தங்களும் உடலுக்குரியவை. இவை தன்மூர்த்தங்கள் (Autosomes) எனப்படும் அமைப்பைக் கொணடு, உடலுக்குரிய நிறமூர்த்தங்களை பால் நிற மூர்த்தங்களிலிருந்து வேறுபடுத்தி அறியலாம்.

பால் நிற மூர்த்தங்கள் வளைந்தவை, ஆணில் ஒன்று 'x' மற்றையது 'y' பெண்ணில் இரண்டும் 'x' ஆகும்.

முட்டையில் தனி 'x' நிறமூர்த்தம் மாத் திரம் இருக்கும். விந்தில் ஒன்றில் 'x' அல்லது 'y' இருக்கும்.

இங்கேதான் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் நிகழ்கின்றது. அதாவது 'x' நிற மூர்த்தமுள்ள விந்து முட்டையுடன் இணையும் போது, தோன்றுவது பெண் (Female) 'y' நிறமூர்த்தமுள்ள விந்து முட்டையுடன் இணையும்போது தோன்றுவது ஆண் (male) ஆகும்.

இப்படியே கருக்கட்டல் நிகழும்போது, இலிங்கம் (sex) நிர்ணயமாகிவிடும் இதன் படி ஆண் - பெண் நிர்ணயத்தை ஏற்படுத்தும் இயல்பு ஆணுக்குத்தான் உண்டு. எனவே 'பெட்டை குழந்தைகளைப் பெத்துப் போடு கிறாளே படுபாவி' என மாமியார் திட்டைக் கேட்டு பரிதவித்த பெண்களே இனி அவர் களுக்கு விடயங்களை விளங்கப்படுத்துங்கள்.

மேலும் சிலருக்கு அடுத்தடுத்து 5,6 பெண்களாகப் பிறக்கின்றன, சிலருக்கு அடுத் தடுத்து ஆண்களாகப் பிறக்கின்றன. சிலருக்கு இரண்டும் கலந்த சமவிதத்தில் பிறக்கின்றன. இதற்கெல்லாம் யாது காரணம் என்பதை இப்போது பார்ப்போம்.

மேலே கூறியபடி ஆண்புணரிகள் இரு வகை உண்டு என்பதை அறிந்தோம். அவற் றில் ஒன்று 'x' மற்றையது 'y' ஆகும். இவற் றில் 'y' நிறமூர்த்தமுள்ள விந்து சிறிய வட்டத்தலையை உடையது. 'x' நிறமூர்த்த முள்ள விந்து நீண்ட தலையையுடையது.

சிலரின் சுக்கிலப் புடத்தில் சிறியவட்ட தலையுடைய விந்துகள், நீண்ட தலையுடைய விந்துகளிலும் மிகக்கூடிய விகிதத்தில் காணப்படும் இந்த 'y' நிறமூர்த்தமுள்ள விந்து மற்றையதைக்காட்டிலும் சுறுசுறுப்பானதாகும். இதனால், இவருக்கே ஆண் குழந்தைகள் பிறப்பதற்குச் சாத்தி யக்கூறுகள் அதிகமான வையாகும்.

சிலரின் சுக்கிலப் பாயத்தில் 'x' நிற மூர்த்தமுள்ள விந்துக்கள் மிக அதிக எண் ணிக்கையில் காணப்படுகின்றன. இவர் களுக்கே அதிகமான பெண்குழந்தைகள் பிறக்கின்றன.

சிலருக்கு இயற்கை நியதிப்படி 'x,y' விந்துக்கள் சமவிகிதத்தில் தோன்றுகின் றன. இவர்களுக்கான ஆண், பெண், விகி தமும் சமமாக அமைவதைக்காணலாம்.

மேலும் 'y' நிறமூர்த்தமுள்ள விந்து சுறுசுறுப்பானது, ஆனால், சீக்கிரத்தில் இறந்து போய்விடக்கூடியது. 'x' நிறமூர்த்த முள்ள விந்துகள் ஆறுதலானவை அத் தோடு கூடியகாலத்திற்கு உயிர்வாழக் கூடியவையாகும்.

எனவே, இப்படிப்பட்ட வேறுபாடுகளைக் கொண்டு, எமக்கு விரும்பிய பிள்ளைகளை (ஆண்,பெண்) பெற்றெடுக்கும் பாக்கியத் தினை இன்றைய விஞ்ஞான வளர்ச்சி யானது கொடுத்துள்ளது.

அதாவது, ஒரு தம்பதிக்கு ஆண் குழந்தை வேண்டுமாயின் கணவனின் சுக்கிலப்பாயத்தைப் பெற்று, அதிலிருந்து 'x' நிறமூர்த்தமுள்ள விந்துகளை அகற் றிவிட்டு, மனைவிக்குச் செயற்கை விந் தூட்டம் (Artifical Insemination) கிடைத்து சுக்கிலப்பாயத்தினால் நிகழ்த்தி கருக் கட்டல் நிகழச்செய்து, ஆண்குழந்தையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அல்லது முட்டையை அகற்றி 'y' நிறமூர்த்தங்கள் உள்ள விந்தினால் கருக்கட்டல் செய்தபின், தாயின் கருப் பையில் வைத்துவிடலாம்.

எனவே தொடராக பெண்ணைப் பெறு கின்றாள் பாவி எனும் மாமியாரின் பேச்சை மடக்க இத்தகைய சிகிச்சையைச் செய்து பலன் பெறுங்கள். இவ்வாறு எல்லோரும் ஆண்களைப் பெற்றுவிட்டால் பெண்ணினம் என்ன ஆவது. எதிர்கால இனவிருத்தி எவ்வாறு நடைபெறுவது கொஞ்சம் சிந்தியுங்கள், பின் செயற்படுங்கள்.

**நிறபேதம் (தூயபேதம்)**

மனித இனத்துக்குரிய குண இயல்பு கள் பல. தனிப்பட்ட மனிதருக்கென்ற தனிப்பட்ட இயல்புகளும் உண்டு. தோல் நிறம், கேசத்தின் நிறம், கண்ணின் நிறம், உயரம், பல்லின் தன்மை, உடற்கட்டு, நடத்தை போன்ற பல குண இயல்புகளும் உண்டு.

இந்த இயல்புகளுக்குரிய செய்திக ளைத் தாங்கியிருக்கும் அமைப்புக்கள் பரம்பரை அலகுகள் அல்லது சந்ததிச் சுவடிகள் என அழைக்கப்படும்.

ஓர் இயல்புக்கு ஒரு பரம்பரை அலகு (DNA) காரணமாக இருக்கலாம் அல்லது ஓர் இயல்புக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பரம் பரை அலகுகள் காரணமாக இருக்கலாம். அல்லது ஒரு பரம்பரை அலகு ஒன்றுக்கு மேற்பட்ட இயல்புகளுக்குக் காரணமாக இருக்கலாம்.

(தொடரும்...)

சே. ஜெயாநந்தன்
புறநிலை விரிவுரையாளர்
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

# தவறான உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்



மனித சமுதாயம் இயற்கையோடு இணைந்து வாழ்ந்துவந்த காலம்வரை, நோயை எதிர்க்கும் ஆற்றலைப் பெற்றி ருந்தது. ஆனால், இயற்கையோடு எதிரான செயல்களை இன்பமாய் எண்ணிவாழும் இன்றைய மக்கள் - பெரும் துன்பத்திற்கும் ஆளாகிறார்கள். அத்தோடு, நம்மில் சிலர் எதையெல்லாம் சரியென்று பிடித்துக் கொள்கிறார்களோ அவற்றிலுள்ள தவறான எண்ணங்களை மாற்றிக்கொள்வது மிகவும் அவசியமாகும் என்கிறார்கள் மருத்துவர்கள். அவர்கள் மேலும் கூறுகிறார்கள் -

பெண்கள் கருவுற்றிருக்கும்காலம் தாய்ப்பால் கொடுக்கும் மாதங்களும், சத் துணவில் அக்கறை செலுத்தும் முக்கி யமான பருவங்களாகும்.

இந்தக் காலத்தில் எதை உண்ண வேண்டும், எதை உண்ணக்கூடாது என்ப தில் சில மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும்.

கருவுற்றிருக்கும் காலத்தில் பப்பாளிப் பழம் சாப்பிட்டால் கருச் சிதைவு ஏற்படும் என்ற ஒரு அச்சம் நிலவுகிறது. ஆனால், இந்தக் காலத்தில் பெண்களுக்கு விற்றமின் A சத்து நிறையத் தேவை என்பதாலேயே உண்ணச்சொல்லியிருக்கிறார் கள். பப்பாளியின் விதைகளுக்குக் கருச்சிதைவு செய்யும் தன்மை உள்ளது என்பதற்காக முழுப்பழத்தையும் ஒதுக்கிவிடுதல்கூடாது.

அதேபோல, முட்டையும் ஆட்டிறைச்சியும் கூடாது, மீன் உண்பது தவறு என்றும் சில பகுதிகளில் வாழும் மக்கள் கருதுகிறார்கள். இதற்கான மருத்துவ ஆதாரம் இல்லை.

பிரசவத்தின்போதும், பிரவசம் ஆன பிற கும் நீர் அருந்துவது ஆபத்து என்ற ஒரு கருதது உள்ளது. ஆனால், கொதிக்க வைதத நீரை தாராளமாகக் கொடுக்கலாம்.

பொதுவாகக் குழந்தைகள் பிறந்தது முதல ஐந்து வயதுவரை எந்த எந்த உணவுகளை முறையாகக் கொடுக்கவேண்டும் என்று உள் ளது. அதனை மருத்துவரின் ஆலோசனையின் படி குழந்தைகளுக்கு வழங்குதல் வேண்டும்.

நன்றாக அவித்த பருப்பை குழந்தைகளுக்கு நிறையச் சாப்பிடக்கொடுக்கலாம். குறிப்பாகப் பயிற்றம் பருப்பு இளம் குழந்தைகளுக்கு நன்கு செரிமானமாகும். முளைவிட்ட பருப்பு விதை களை முழுதாகச் சமைத்தாலும் அல்லது வெயிலில் காயவைத்துப் பொடியாக்கி உணவாக்கினாலும் குழந்தைகளின் ஆரோக் கிய உணவுக்கு அவை நல்லது. வாழைப் பழமா... அது மந்தம் குழந்தைக்கு ஆகாது, இழுப்பு வந்துவிடும் என்பார்கள். பழுத்தபழம் எதைத்தின்றாலும் ஒத்துக்கொள்ளாது, அதற் காகப் பழமே சாப்பிடக்கூடாது என்று முடிவு செய்யக்கூடாது.

எருமைப்பாலை குழந்தைகளுக்குக் கொடுத் தால் மூளை மந்தமாகிவிடும் என்கிறார்கள். எருமையின் இயல்பை வைத்தே அவ்வாறு சொல்கிறார்கள் என்பதைத் தவிர வேறில்லை. குழந்தை பிறந்த இரண்டு மூன்று நாட்களுக்கு தாய்ப்பால் நன்கு சுரக்காமல், நீர் போல சுரக கும் இதற்கு கொலஸ்ட்ரம் என்று பெயர். சிலர் இத்திரவத்தைக் குழந்தைக்கு ஊட்டக் கூடாது என்று தடுப்பார்கள். அதற்குப் பதி லாகக் கற்கண்டு தண்ணீரைக் கொடுக்கச் சொல்வார்கள். ஆனால், கொலஸ்ட்ரம் என்னும் திரவம் அரிய சத்துக்களைக் கொண்டது. சிறு குழந்தைகளுக்கு வேண் டிய நோய்த்தடுப்பு மருந்துப் பொருள்கள் அதில் அடங்கியுள்ளன. மேலும் குழந்தை இந்தத் திரவத்தை உறிஞ்சும்போதிலும் தாய்க்கு இயல்பான சுரப்பு உண்டாகும்.

குழந்தைக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட் டால், சிலர் பட்டினி போட்டுவிடுகிறார்கள். இது தவறாகும். அப்பொழுது கற்கண்டுத் தண்ணீர் கொடுக்கலாம். தாய்ப்பால் கொடுப் பதை எக்காரணம் கொண்டும் நிறுத்தக் கூடாது. மழையில் நனையாதே பனியில் நடக்காதே அதைத்தின்னாதே.... இதைத் தின்னாதே என்று தடுத்துக்கொண்டே இருக்காதீர்கள். அவர்கள் வளர்ந்து பெரி யவர்கள் ஆனதும் குழந்தைப் பருவத்தில் நீங்கள் சாப்பிடக்கூடாது என்று தடுத்த உணவுகளைச் சாப்பிடுகின்றபோது, நிச் சயமாக அவர்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. எனவே, இது போன்ற தவ றான கருத்துக்களை சற்றுத் தள்ளி வைதது விட்டு இயல்பாய் அணுகுவது நல்லது என்கிறார்கள் மருத்துவர்கள்.

# இந்த வார பலன்கள்

## 09-01-2004 - 15-01-2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் | ராகு | | சனி |
| யுரே | 09 இ. 11-26 கும்-சுக்<br>10 இ. 9-14 சிங்-சந்<br>12 பி.இ. 4-38 கன் - சந்<br>14 இ. 12-13 மக - சூரி<br>15 ப. 9 -59 துல-சந் | | சந் |
| சுக்<br>நெப் | | | குரு |
| சூ.<br>புத | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசி அன்பர்களே! தொழில் முயற்கிகள் சிறப்பாக அமையும். பொருளாதாரமும் சறப்பாக அமையும். குடும்பத்தில் நல்லுறவு பேணப்படும். பெண்கள் மனப்பூரிப்புடன் திகழ்வார்கள். புத்திரர்களால் உதவியும், மன மகிழ்ச்சியும் உண்டாகும். திருமணப் பேச்சுக்கள் மனம்போல் விரைவல் கைகூடும். புதிதாக தொழில்பெற விண்ணப்பித்தவர்கள் நன்மை பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு குறையும். விவசாயத்துறையில் ஈடுபட்டவர்கள் நிறைந்த வருமானத்தைப் பெறுவார்கள். வர்த்தகர்களுக்கு வங்கி ஈடுபாடுகள் சிறப்பாக இருக்கும். வியாபாரம் சிறப்பாக நடக்கும். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி காணும். மாணவர்கள் முன்னேற்றமடைவார்கள். மேற்படிப்புக்கான வசதிகள் கிடைக்கும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசி நேயர்களே! உங்களுக்கு தொழில் முயற்சிகள் திருப்திகரமாக இருக்கும். செலவுக்கேற்றவகையில் பணவரவு அமையும். குடும்பத்தில் நல்லுறவு சிறப்பாக இருக்கும். தேக ஆரோக்கியம் பாதிப்படையாது. தொடங்கிய கருமங்கள் சிறப்பாக அனுகூலமாகும். பிற நாட்டிலிருந்து பணவருவாய் கிடைக்கும். உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியும், குதூகலமும் காணும். திருமணம் சம்பந்தமாகப் பேச்சுக்கள் நற்பயனளிக்கும். தூரதேசப் பிரயாணத்தை எதிர்பார்ப்போர் விரைவில் கருமம் சிததியாகும். உத்தியோகஸ்தர்களுக்குள் சிலருக்கு பதவி கிடைக்கும். வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். மருந்து வியாபாரம், இரும்பு வியாபாரம் கூடிய பலன் தரும். மாணவர்கள் சித்தியும், பாராட்டும் பெறுவார்கள்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் ஜனனமான அனபர்களே! உங்கள் வழமையான தொழில்முயற்சியில் தடைகள் தாமதங்கள் காட்டும். வரவிலும் பார்க்க, செலவு கூடுதலாக இருககும். மன நின்மதிக் குறைவு, விரக்தி ஏற்பட இடமுண்டு. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். பிள்ளைகளால் மனச்சஞ்சலம் தோன்றும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலிருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். இடமாற்றங்கள் வசதி குறைந்ததாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும் மாணவர்களுக்கு முன்னேற்றங்கள் தடைப்படும். எதிர்பார்த்தளவு புள்ளிகள் கிடையாமற் போகலாம்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசி அன்பர்களே! உங்களுக்கு ஏழரைச்சனி நடக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். தொழிற்துறையில் அலைச்சல், தாமதம் ஏற்படும். செலவினங்கள் கட்டுப்படுத்த முடியாமல் தத்தளிக்க நேரிடும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றும். எல்லா விஷயங்களிலும் அவதானமாக இருத்தல்வேண்டும். கொடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றமடையக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். திருமணப் பேச்சுக்கள் பல இழுபறிகளுக்குப் பின் நிறைவேறும். தூரதேசப் பிரயாணங்கள் கூடுதலாக இருக்கும். மேலதிக நேர வேலைச் சம்பளங்கள் கிடைக்கும். வர்த்தகர்கள் வியா பாரத்தில் பல பிரச்சினைகள் எதிர்கொள்ளவேண்டிவரும் மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

### சிங்கம்

*(மகம, பூரம், உத்தராடம் 1 ஆம் கால்)*



துணிச்சல் மிக்க சிங்கராசி அன்பர்களே! உங்களுக்கு ஜென்ம வியாழன் நடக்கிறது. தொழிற்துறையில் அலைச்சலும், பிரயாசையும் கூடுதலாக இருக்கும். குடும்பத்தில் சிநேக மனப்பான்மை குறையும். உறவினரிடையே மனஸ்தாபங்கள் ஏற்படலாம். புத்திரர்களாலும் மனச்சஞ்சலம் உண்டாகும். செய்கின்ற தொழில் எதுவானாலும் பிரயாசையே கொடுக்கும். காதல் விவகாரங்கள் தோல்வியிலேயே முடியும். உத்தியோகஸ்தர்களுக்கு உயரதிகாரிகளின் கெடுபிடிகள் கூடுதலாகவிருக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடையாது. வர்த்தகர்கள் வியாபாரம் சம்பந்தமான. விஷயங்களில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவர். வங்கிநிலையும் கஷ்டமாகவே இருக்கும். மாணவர்கள் கல்வியில் மந்தநிலையுடன் காணப்படுவர். சோம்பல் தன்மை மிகும். பெற்றோர் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

### கன்னி


*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசி நேயர்களே உங்களுக்கு தொழில் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எக்கருமத்தையும் திட்டமிட்டு சரிவரநடத்தமுடியும். வருவாயும் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்சசியும் குதூகலமும் காணப்படும். பெண்கள் மனத்திருப்தியுடன் காணப்படுவர் சிலருக்கு திடீர்பணவரவு கிடைக்கக்கூடும். திருமணப் பேச்சுக்கள் நிறைவுபெறும். ஒவ்வொருவரும் தமக்கு விரும்பிய வாழ்க்கைத் துணையை அடைவார்கள். அடிக்கடி பிரயாணம் மேற்கொள்ள வேண்டிவரும். உத்தியோகத்தவர்களுக்கு வேலைப்பளு குறையும். உயரதிகாரிகளின் ஆதரவும், விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கலாம். வர்த்தகர்கள் தமது தேங்கிக் கிடந்த முதலீடுகளை விற்று நல்ல பணம் சம்பாதிப்பர். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. மேல படிப்புக்கும் இடம் கிட்டும்.

### துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் ஜனனமான அன்பர்களேஉங்களுக்கு இவ்வாரம் நன்மை, தீமை, கலந்த பலன்கள் நிகழும். உங்கள் சுயமுயற்சிகளில் சற்று அலைச்சல் கூடுதலாக இருப்பினும் இறுதியில் நல்ல லாபம் கிடைக்கும். குடும்பஸ்தர்களுக்கு குடும்பத்தில் சில மனக்கசப்புக்கள் தோன்றினாலும் விரைவில் எல்லாம் சரியாகிவிடும். பொருளாதாரம் சற்றுத் தடங்கலாக இருப்பினும், ஏதோ ஒருவகையில் பொருள் வரவு கிடைக்கும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். உறவினர்களால் நன்மை உண்டு. திருமணப் பேச்சுக்கள் இழுபறியின் மேல் கைகூடும். புதிதாக தொழிலுக்கு விண்ணப்பித்தவர்கள் நன்மைபெற வாய்ப்புண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாக இருப்பினும், தமது சாமர்த்தியத்தால் அவற்றை முன்னெடுத்துப் பாராட்டைப்பெறுவர். வர்த்தகர்கள் பொருட்களை விற்பனைசெய்வதில் சிரமம் காண்பர். மாணவர்கள் வெகு சிரமத்தின்மேல் கல்வி முன்னேற்றம் காண்பர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசி நேயர்களே உங்களுக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். முயற்சிகளில் தாமதம் அலைச்சல் காட்டும் பொருளாதார நிலையும் நடுத்தரமாகவே இருக்கும் வாழ்க்கைச் செலவுகள் மிக அதிகமாகக் காட்டும். பிள்ளைகளால் ஓரளவு உதவி உண்டு. நண்பர்கள் கூட பகைமை சாதிப்பார்கள். குடும்பப் பெண்கள் சிக்கனத்துடன் நடந்துகொண்டால் எவ்வித சிரமமும் இராது தேவையற்ற விஷயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும் தூரதேசப் பிரயாணங்கள் கைகூடாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலைகாட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று மாணவர்கள் சோம்பல் தனத்தால் முன்னேற்றங்களை இழப்பர். உற்சாகம் தேவை

### தனுசு

*(மகம், பூராடம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



தனுராசி நேயர்களே! உங்களுக்கு இவ்வாரம் எல்லாக் கருமங்களும் அனுகூலமாகும். பணவருவாய் நன்றாக இருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமையும் மனமகிழ்ச்சியும் தோன்றும். வியாழ பகவான் 9 ஆம் வீட்டிலிருந்து பல நன்மைகளைச் செய்வார். பிற தேசத்திலிருந்து எதிர்பாராத பணவருவாய் கிடைக்கும். திருமணமாகாதோருக்கு திருமணம் நிச்சயமாகும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மனத்திருப்தியுடன் காணப்படுவர். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் பல புதிய வசதிகள் கிடைக்கும். சிலருக்கு விரும்பிய இடமாற்ங்கள் கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓகோ என்று நடைபெறும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சியும் பராட்டுக்களும் பெறுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திரு*



மகரராசி அன்பர்களுக்கு எடுத்த காரியங்கள் அனுகூலமாகும். குடும்பத்தில் நல்லுறவுகள் வலுக்கும். கணவன் மனைவியிடையே அன்னியோன்னியத்துடன் காணப்படுவார்கள். திருமணம் பற்றிய பேச்சுக்கள் வெற்றியளிக்கும். வெளியூரிலிருந்து உறவினரின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியும், குதூகலமும் காணப்படும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு குறையும். உற்சாகத்துடன் கருமமாற்றுவார்கள். வியாபாரிகளுக்குக் கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி நிலவும். வியாபாரம் சுறுசுறுப்புடன் நடைபெறும். பணமும் தாராளமாகச் சேரும். மாணவர்கள் முன்னேற்றம் அடைவர். உயர்கல்வி சாத்தியமாகும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசி அன்பர்களே! உங்களுக்கு தொழிற்துறையில் அலைச்சலும் பிரயாசையும் அதிகமாகும். எனினும் தொடங்கிய கருமங்கள் வெற்றியிலேயே முடியும். குடும்பத்தில் சில கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும், பெரிதாகப் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் பொறுப்புடன் நடந்து கொண்டால், எதையும் சமாளிக்க முடியும். இல்வாழ்க்கையில் இணைய விரும்புபவர்களுக்கு காலதாமதம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய பொறுப்புகள் இருந்தாலும் வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்வர். சிலருக்கு இடமாற்றங்கள் வசதியாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய முதலீடுகளையும் செய்யலாம். மாணவர்கள் முன்னேற்றமடைவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசி நேயர்களே உங்கள் தொழில் முயற்சியில் தடையும் தாமதமும் காட்டும். முயற்சிக்கேற்ற வகையில் வருமானம் கிடைக்காது. மன நிம்மதிக்குறைவும், விரக்தியும் காணப்படும். தேக சௌக்கியமும் இடையிடையே பாதிக்கப்படலாம். குடும்ப அங்கத்தவர்களிடையே பூசல்கள் தோன்றும். புத்திரர்களால் செலவுகள் ஏற்படும். சுபகாரிய முயற்சிகள் காலந்தாழ்த்திக்கொண்டு போகும். தூரதேசப்பிரயாணத்தை எதிர்நோக்குவோர் ஏமாற்றமடைய நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு, பிரயாசை கூடுதலாக இருக்கும் உயரதிகாரியின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையாகவே இருக்கும். வாடிக்கையாளர்கள் பிரிந்து செல்ல நேரிடும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர். கல்வியில் ஊக்கம் செலுத்தவும்.

---

# பலரின் வாழ்வை இருட்டுக்குள் தள்ளும் திருட்டு மின்சார பாவனையாளர்கள்

இன்று யாழ்மாவட்டத்தில் உருவாகியுள்ள பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக விளங்குவது, சட்டவிரோதமான மின்பாவனையாளர்களின் அதிகரிப்பாகும். இதனை சாதாரணமாக எமது பேச்சுவழக்கில் "கள்ளக்கரண்ட்" எடுத்தல் அதிகரித்துள்ளது எனக்கூறலாம்.

யாரோ சிலர் செய்யும் இந்த ஈனச்செயல் பலரையும் பாதிக்கும் என்பதாலேயே இதனைப பாரிய பிரச்சினையாகக் கருதவேண்டியுள்ளது.

மற்றவர்களுக்கு இடையூறாகவும், உயிராபத்துக்கள் இடம்பெறவும் காரணமாய் அமைந்துவிடும் சட்டவிரோத மின்பாவனையைத் தடுப்பதற்கு, மின்சார சபையினர் - பொலிஸார் எடுத்த முயற்சிகளையும் முறியடித்து, தொடர்ந்தும் ஏட்டிக்குப் போட்டியாக மேற்கொண்டு, இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் இல்லாத அளவிற்கு, சாதனையான எண்ணிக்கையில், யாழில் சட்டவிரோத மின் பாவனையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சாதாரண குப்பி விளக்கு கொழுத்துவதற்கு மண்ணெண்ணை இல்லையே என, ஏங்கிய எமது யாழ்.மக்கள். இன்று அந்த நெருக்கடிக்காலத்தைக் தாண்டி, புதிய எண்ணப்பாடும், செயற்பாடுகளும் கொண்ட ஓர் யுத்தத்தினுள் புகுந்துவிட்டதாகத் தோன்றுகின்றது.

இன்று தாராளமாக குறைந்த விலையில் மண்ணெண்ணை கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற நிலையிலும், மக்கள் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்று பகட்டுவாழ்வை வாழ விரும்புகின்றனர். இது அம்பலப்டுத்தும்போது, ஏற்படக்கூடிய சிக்கல்களைப்பற்றி அவர்கள் எண்ணிப்பார்க்க மறந்து விடுகின்றனர்.

### சட்டவிரோத மின்பாவனை

1996 ஆம் ஆண்டின் பின் யாழ்.மாவட்டத்திற்கான மின்விநியோகம் சீராக்கப்பட்டு, மின் வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படத் தொடங்கிய காலம் முதல், சட்டவிரோத மின் பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகின்றது.

இன்று யாழ் குடாநாட்டில் சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான சட்டவிரோத மின்பாவனையாளர்கள் இருக்கலாம் என, மின்சாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் மட்டுமல்ல, யாழ்நகரின் மையப்பகுதியில் கூட, இத்தகைய கள்ளக் கரண்ட் பெறுவோர் வசித்து வருகின்றார்கள் என்பது, ஆச்சரியத்திற்குரிய விடயமாகும்.

வீதிக்கு மேலாகச் செல்லும் கம்பிகளில் வயரைக் கொழுவி மின்னைப்பெறுவது, உரிமை நிலையாகக்கூடக் கருதும் நிலைப்பாட்டில் சிலர் செயற்படுகின்றனர். சில இடங்களில் இந்த சட்டவிரோத மின்னெடுப்பதில் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றனர்.

ஓசியில் கிடைத்தால் ஒயிலையும் குடிப்பார்களாம் சிலர். அதுபோலத்தான் இந்த ஓசி மின் சாரத்தைப் பெறும் சிலரது வீடுகளில் ரி.வி, ரேடியோ, மின்விசிறி குளிரூட்டி அரைக்கும் சாதனங்கள் என, ஏராளமான மின் உபகரணங்கள், சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வீண் ஆடம்பரவாழ்விற்காக, இத்தகைய சட்டவிரோதச் செயலைச் செய்வது எந்தவகையில் நியாமானதெனக் கருதுகிறார்களோ தெரியவில்லை. ஆனாலும், சில வீடுகளில் வெளிச்சத்திற்காக மட்டும் போதிய மின்குமிழ்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள்கூட ஒன்றில் ஏனைய விளக்குகள் மூலமோ அல்லது ஒழுங்கான முறையில் மின்சாரத்தைப் பெற்றோ தமது தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

### பாதிப்புக்கள்

சட்டவிரோத மின்பாவனையாளர்களால் - அவர்கள் மட்டுமல்ல, அயலவர்கள் கூட பெரும் சிரமங்களை அனுபவிக்க நேருடுகின்றது. அதைப்பற்றி எல்லாம் அவர்கள் கவலைப்படுவார்கள் என்று, எண்ணமுடியாது. ஆனாலும் அவர்கள் இனியாவது சற்று மனச்சாட்சியுடன் நடந்துகொள்ள முயலலாம் அல்லவா?

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் வழங்கப்படும் மின்சாரம் அந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளின் பாவனைக்கேற்ப அளவிலேயே, மின்சார சபையினரால் விநியோகிக்கப்படுகின்றது. இவ்வாறு, மட்டுப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படும் போது, இடையில் சிலர் புகுந்து, கள்ளக் கரண்ட் எடுக்கும்போது - அதிக வலுவை வழங்கமுடியாத நிலையில் மின்மாற்றிகள் செயற்பாட்டை இழக்கநேரிடுகின்றன.

இதனால் ஒரு வீதியில் வசிக்கும் பல குடும்பங்கள்' அல்லது ஒரு பிரதேசமே இருளில் மூழ்கவேண்டிய கட்டாயத்திற்குள் உட்படுகின்றன. இது மட்டுமல்ல, மின்பிறப்பாக்கிகள் மூலம் வழங்கப்பட்டு வரும் மின்சாரம் இடையிடையே கொழுவப்படும் கள்ளவயர்களின் ஊடான திருட்டு மின்சாரம் அதிகளவிலான வீடுகளில் தேவைக்குப் போதிய மின் சாரத்தை பெறமுடியாது போவதால், முழுமையான தேவையை பூர்த்திசெய்யமுடியாத நிலை ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி இலங்கை மின்சாரசபை நட்டத்தில் இயங்குவதற்கும், இந்த சட்டவிரோத மின்பாவனையாளர்களின் சாகசங்களும் ஒரு காரணம்.

அண்மையில் மின் கட்டணம் அதிகரிக்கப் பட்டமைக்கும், இத்தகைய சட்டவிரோத மின்பாவனையாளர்களின் செயலே காரணம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இக்கட்டண அதிகரிப்பு பலரது வயிற்றில் புளியைக் கரைப்பது போன்ற நிலையை தோற்றுவித்துள்ளது. ஒரு சிலரின் செயல் - ஒட்டுமொத்த ரீதியில் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றமை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

### உயிரிழப்புக்கள்

சட்டவிரோத மின்பாவனையால் கடந்த வருடம் மட்டும், ஐந்து பேர்வரையில் யாழ் குடாநாட்டில் உயிரிழந்துள்ளனர். அதேவேளை- இந்த மின்பாவனையாளர் மின்சாரத்தின் தாக்கத்திற்குட்பட்டநிலையில், 20 பேர் வரையில் யாழ் போதனாவைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளார்கள். கடந்தவருடம் இடம்பெற்ற பரிதாப சம்பவம் ஒன்றை இங்கு ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. அதாவது, தினமும் கள்ளக்கரண்ட் எடுக்கும் ஒருவரது 12 வயது சிறுவன், காலையில் கள்ளக்கரண்ட் எடுப்பதற்காக கொழுவிய வயரை மின்சார இணைப்புத் துண்டிக்கப்பட்டதாக எண்ணி, அதனைச்சுற்றி எடுக்கமுற்பட்ட போது - மின்சாரம் தாக்கி இறந்துபோனான்.

இதுபோல் பல சம்பவங்கள் கடந்த 5 வருடங்களில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய உயிரிழப்புக்களைக் கருத்தில் கொண்டாவது சட்டவிரோத மின் பாவனையாளர்கள் தமது மனச்சாட்சிக்குப் புறம்பான செயல்களைக் கைவிடுதல் வேண்டும். (தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

**செந்தணன்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பிழை தரும்.

-திருக்குறள்.

## நமது நோக்கு

### ரணிலின் புதிய அரசியல் வியூகம்; சந்திரிகாவின் நகர்வு எப்படி இருக்கும்?

"ஏட்டிக்குப் போட்டி அல்லது பழிக்குப்பழி" என எது பொருத்தமாகப் படுகிறதோ அந்த வார்த்தைகளை இந்தச் சம்பவங்களுக்குப் பொருத்தமான தலைப்பாகப் போட்டுக் கொள்ளமுடியும்.

"காலம் பார்த்துக் காலை வாருதல்" அரசியல்வாதிகளின் இயல்புதான். எனினும் தனிப்பட்ட முறையில் அல்லது தேசத்தின் நலனையோ அல்லது மக்களின் நலனையோ பாதிக்கும் அளவுக்கு அத்தகைய நடவடிக்கைகள் அமைவதுதான் அரசியல் சுயநலத்தின் உச்சக் கட்ட வெளிப்பாடாகவும் உள்ளது. இத்தகைய நிகழ்வுகள் சிறிலங்காவின் பேரினவாத அரசியல் மரபாகியுள்ளதுடன், இதன் எதிரொலியாகவே இன்றைய அதன் அவலங்கள் யாவும் அமைந்துள்ளன என்றும் கூறமுடியும்.

இரு மாதங்களின் முன்னர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வமாக விஜய மொன்றை மேற்கொண்டு சென்றிருந்த வேளையில், அவரின் கீழான அமைச்சரவையிலிருந்து மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறித்துக்கொள்ளும் சட்டபூர்வ அரசியல் சதி ஒன்றை தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி மேற்கொண்டதன் மூலம், ரணிலுக்கு ஓர் அதிர்ச்சியை அளித்ததுடன், அவரது பலவீனமான அதிகாரங்களை மட்டுமே கொண்ட பிரதமராகவும் மாற்றினார்.

இதனை தன் முதுகில் குத்திய துரோகத் தனமான நடவடிக்கையாகவே ரணில் கருதியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

அவர் தனக்கு சந்திரிகா ஏற்படுத்திய அவமதிப்பாகவும், இந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டதுடன், சமாதான முன்னெடுப்பு முயற்சிக்காகத் தனக்கு சர்வதேச மட்டத்தில் கிடைத்துவரும் அபரிமிதமான ஆதரவை ஜனாதிபதியால் பெற்றுக்கொள்ளமுடியவில்லை என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டவராகவும் இருந்தார்.

சந்திரிகாவின் இந்த அதிரடி செயற்பாடுகாளால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள், சமாதானத்தை வெகு தொலைவுக்குப் புறம் தள்ளிவிட, ரணில் அடுத்து மேற்கொண்ட நடவடிக்கைகள், விடுத்த அறிவிப்புக்கள் சந்திரிகாமீது தேசிய ரீதியிலும், சர்வதேசரீதியிலும் அழுத்தங்களை ஏற்படுத்த ஆரம்பித்தன.

ஆனாலும், சந்திரிகா தனது நிலைப்பாட்டிலிருந்து சிறிது கூட அசைவதாக இல்லை என்பது தேசிய நலனைக் கருதியோ, சமாதான முன்னெடுப்பின் அவசியத் தேவை கருதியோகூட விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள தயாராக இல்லை என்பது அவரது அன்றாட அறிவிப்புக்கள்மூலம் தெளிவாகியது.

ரணில் - ஆரம்பித்த சமாதான முயற்சிகள், அதனை முன்னெடுக்க அவசியமான அதிகாரபலம் அவரிடமிருந்து பறிக்கப்பட்ட சூழலில், அவரால் தொடரமுடியாத நிலை காரணமாக அதனை அதிகார வலுவுள்ள ஜனாதிபதியே பொறுப்பேற்கவேண்டுமென்று அறிவித்ததில் நியாயமிருக்கவே செய்தது.

ஆரம்பத்திலேயே தன்னைக் கேட்காது, தன்னுடன் ஆலோசிக்காது, தனது அங்கீகாரமோ, கையொப்பமோ பெற்றுக் கொள்ளாது போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரணில் செய்தமையால் அதிருப்தி அடைந்த சந்திரிகாவினால் சமாதான முயற்சிகளின் பொறுப்பை ஏற்பது என்பது அவரின் யுத்த மனோபாவத்திற்கு மாறான ஒன்றாக இருந்தமையால், அவர் அதனை நிராகரித்ததில் வியப்பில்லை. ரணிலே சமாதான முயற்சிகளைத் தொடரவேண்டும். அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதானது "கால்களைக் கட்டிவிட்டு ஓடி விளையாடு" என்று சொல்வதைப் போன்றதாகவே இருந்தது.

இதுதொடர்பான இருவரிடையேயான பேச்சுக்களில் இணக்கம் எதுவும் ஏற்படவில்லை.

இதுகூட காலத்தைக் கடத்தும் ஒரு முயற்சியாகவே இருந்தது என்பது வெளிப்படையானதே.

இந்த நிலையில் ஜனாதிபதி "சார்க்" உச்சி மாநாட்டுக்காக பாகிஸ்தான் சென்றிருந்தவேளையில், ரணில் ஓர் அதிரடி அறிவிப்பொன்றை வெளியிட்டு, பரபரப்பை ஏற்படுத்தியும், சந்திரிகாவுக்கும் நெருக்கடியை ஏற்படுத்திவிட்டுள்ளார்.

இதுதான் ஏட்டிக்குப் போட்டி அல்லது பழிக்குப்பழி என முதலில் குறிப்பிட்ட விடயமாகும்.

போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்தும், சமாதானப் பேச்சுக்களிலிருந்தும் தாம் முற்றாக விலகப் போவதாகவும், இரண்டையும் இனிமேல் ஜனாதிபதிதான் பொறுப்பேற்கவேண்டும் என்றும் அவர் நேற்றுமுன்தினம் அறிவிப்பொன்றினை விடுத்து, சந்திரிகாவுக்கு மேலும் அழுத்தங்களை ஏற்படக் காரணமாகியுள்ளார்.

உண்மையில் இது ஒரு இராஜதந்திர மூலோபாயத்துடன்கூடிய நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையேயாகும்.

சந்திரிகா பாகிஸ்தானிலிருந்து நாடு திரும்பியதும், இதற்கு என்ன சொல்லப்போகின்றார்?


போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து, ரணில் விலகுவதானால், அதிலுள்ள ரணிலின் கையொப்ப அதிகாரத் தன்மையை இழந்துவிடும் நிலையில் அந்த உடன்பாடு செயலற்றுப் போய்விடும்.

இந்த நிலையில் - சந்திரிகா அந்த உடன்பாட்டைத் தனது கையொப்பத்துடன் புதுப்பிக்க முன்வருவாரா? அப்படி அவர் முன்வந்தால், சமாதானத்தை முன்னெடுக்கும், போர் நிறுத்தத்தைப் பாதுகாக்கும், பொறுப்பினை அவர் பொறுப்பேற்றவராகிவிடுவார். இது அவரால் சாத்தியமாகக்கூடிய ஒன்றா? பாகிஸ்தானிலிருந்து "புதிய இந்தியக் கனவுகளுடன்" வந்திறங்கவுள்ள சந்திரிகாவுக்கு இது குழப்பமும், அதிர்ச்சியும் தரும் சூழலேயாகும்.

ரணில் தனது வியூகத்தை இறுக்கமாக்கி, சந்திரிகா மீதான இறுதிக் கணைகளைப் பிரயோகிக்கத் தொடங்கி விட்டார் என்றே கூறவேண்டும்...

இந்தச் சந்திரிகா - ரணில் யுத்தத்தின் முடிவு என்னவாக இருக்கும்... அது நான்காம் ஈழப்போர் குறித்த கேள்விக்கு விடையளிப்பதாகவும் இருக்கும்!

## நாடும் நடப்பும்




# வடக்கு - கிழக்கு கஷ்டப் பகுதிகளுக்கு எம்.பி.பி.எஸ் வைத்தியர் நியமனம்

## உலக சுகாதார நிறுவனம் நடவடிக்கை

வடக்கு-கிழக்கில் உள்ள கஷ்டப் பிரதேச வைத்திய சாலைகளுக்கு உலக சுகாதார நிறுவனம் எம்.பி.பி.எஸ் வைத்தியர்களை விரைவில் நியமிக்கவுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.சிவராஜா இது குறித்து தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கிலுள்ள கஷ்டப் பிரதேச வைத்திய சாலைகளுக்கு எம்.பி.பி.எஸ் வைத்தியர்களை நியமிக்கும் பணிகளை உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதன்முதல் கட்டமாக ஒன்பது எம்.பி.பி.எஸ் வைத்தியர்கள் நியமனம் பெற்றுள்ளனர். இன்னும் 11 பேர் நியமிக்கப்படவுள்ளனர்

வன்னிப் பகுதியில் பல பகுதிகளுக்கு இவ்வாறு வைத்தியர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. இதனை விட, குடாநாட்டின் தீவுப்பகுதிகள் மற்றும் கிராமப் புற வைத்திய சாலைகளுக்கும் இத்தகைய எம்.பி.பி.எஸ் வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# இரண்டாவது நாளாக தொடர்ந்த ஊழியர் வேலை நிறுத்த போராட்டம்

நிர்வாக மட்டத்தில் நிலவும் குறைபாடுகளை நீக்கக் கோரி, யாழ்.பல்கலைகழக ஊழியர் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைநிறுத்தப்போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றுத் தொடர்ந்தது.

நேற்றுக் காலை பல்கலைக்கழக வாயிலுக்கு முன்பாகக் கூடிய ஊழியர்கள் - தமது வேலைகளைப் பகிஷ்கரிப்புச் செய்துள்ளனர். பல்வேறு சுலோகங்கள் தாங்கிய அட்டைகளையும் பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டினார்கள். இந்த அட்டைகளில் பல்கலைக்கழகத்துக்கு - பொலிஸையும், இராணுவத்தையும் முடியுமானால் அழைத்துப் பார். பின் கதவு உங்களுக்கே. இதையாரும் மூடமாட்டார்கள், கம்பியூட்டர் வாங்கினால், கார் இனாம், எமக்கு ஒழுக்கம், பண்பாடு போதிக்க முற்படுபவர்கள் நிலைக்கண்ணாடிமுன் நிற்பதில்லையா? என எழுதப்பட்டிருந்தன.

ஊழியர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்ட போது, அத்தியாவசியத் தேவைகளுக்கான குடிநீர் விநியோகம், மின் விநியோகம் என்பன தொடர்பான வேலைகளை ஊழியர்கள் மேற்கொண்டனர். தற்பொழுது புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படும் காலமாகையால், ஊழியர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்களானால், மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுவது கடினமான இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# பயிலுநர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

தகுதிகாண் மற்றும் பயிலுநர் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் பயிலுநர் மற்றும் தகுதிகாண் அடிப்படையில் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கே தற்போது நியமனம் வழங்கு வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேற்றுப் புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இந்த ஆசிரியர்கள்-நீண்டகாலமாகப் பாடசாலைகளில் சேவையாற்றியபோதும், இவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. தற்போது இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொண்டுவருகிறது. இதற்கான விண்ணப்பப்படிவங்கள், வலய கல்விப் பணிமனைகளில் உள்ளதாகவும், உரியவர்கள் அதனைப்பெற்றுக்கொண்டு விரைவில் பாடசாலை அதிபர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரின் உறுதியுடன் மாகாணக் கல்வி அமைச்சின் செயலருக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச)

# பனை - தென்னைவள கூட்டுறவு சங்க ஊழியர்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட குழு நீண்ட காலமாக செயற்படாதுள்ளது

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(வடமராட்சி)

பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு செயற்படாமல் இருப்பது, மனித உரிமை மீறல் எனத் தெரிவித்து இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு, பருத்தித்துறை பனை - தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

இந்த முறைப்பாட்டில் - 2002 ஆம் ஆண்டு நவம்பர் 11 இல் திருகோணமலை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கத் தலைவர்களையும், பொதுமுகாமையாளரையும் யாழ். வீரசிங்க மண்டபத்தில் அழைத்து கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினார். அதில் பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான நிரந்தர நியமனம் வழங்கப்படாமை, சில பணியாளர்களுக்குச் சம்பள உயர்வுகள் நிலுவைகளுடன் வழங்கப்பட்ட அதேவேளை, சில பணியாளர்களுக்கு அவை வழங்கப்படவில்லை, இலாபகரமாக இயங்கும் மாதங்களுக்கு இடைக்காலப் படிகளை வழங்குமாறு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அறிவித்திருந்தும், அதனை சில சங்கங்கள் வழங்க மறுத்தல் போன்ற மனித உரிமை மீறல் செயல்கள் பற்றி முன்வைக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக ஆராய்வதற்காக 9 பேர்கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. ஆனால், இந்தக் குழு நியமிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகியபோதும் எந்தவிதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே, இந்தவிடயம் சம்பந்தமாக விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீர்வு பெற்றுத்தரவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

ஒரு கல்விக்களச் சுற்றுலா அனுபவக் கட்டுரை

- பகுதி 3 -

# முஸ்லிம்களை வேறுபடுத்திப்பார்க்க விடுதலைப் புலிகள் விரும்பவில்லை

தென்கிழக்குப்பல்கலைக்ழக மாணவர் சமூகம் நடாத்திய ஒலுவில் பிரகடனம் குறித்தும், முஸ்லிம் தேசப் பிரகடனம் குறித்தும், தமிழ் புத்திஜீவிகள் மட்டத்தில் தெளிவற்ற நிலை உள்ளதை யாழ்பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர்கள் சுட்டிக் காட்டியபோது, தென்கிழக்குப் பல்கலைக்ழக விரிவுரையாளர்களும், மாணவர்களும் அது முஸ்லிம்களின் தனித் தேசத்துக்கான ஒரு பிரகடனம் அல்ல என்றும், அன்றைய சூழலில் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்களின் நலனை, பிரதிநிதித்துவத்தை உறுதிப் படுத்துவதையும், பிரிந்திருந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களை ஒன்று படுத்துவதை வலியுறுத்துவதையும் நோக்காக் கொண்டே - அந்த எழுச்சி மாநாடும், ஒலுவில் பிரகடனமும் நடந்தேறின. என்பதை திடமாக தெளிவுபடுத்தினர்.

முஸ்லிம்களுக்கு தனி அலகு உருவாக்குவது தொடர்பாக தமிழர்கள் மத்தியில் எந்த வித முரண்பாடுகளும் இல்லை. முஸ்லிம்கள் மத்தியில் முரண்பாடுகள் உள்ளன. இந்த நிலையில் எவ்வாறு தனி அலகை உருவாக்குவது என்ற வாதத்தை சிரேஷ்ட விரிவுரையாளர் சகாயசீலன் முன்வைத்தபோது, விரிவுரையாளர் எம்.ஏ.ஜப்பார் இந்த உள் முரண்பாடுகள் எங்கும் உள்ளவைதான் என்றும் கட்சி அரசியல் அல்லது காட்டிக்கொடுக்கும் அரசியல் தீவிரம் பெற்றுள்ள இந்த நிலையில் அவற்றின் விளைவுகளைக் களைவதற்கும், சிறந்த ஏற்பாடுகளின் மூலம் இரு சமூகங்களும் நியாயமான அதிகாரப்பகிர்வினை பெற்றுக்கொள்வதற்கும் இரு சமூகத்துக்குமான உறவுகள் வளர்க்கப்படுவதற்கும் அரசியல் சார்பற்ற கல்விசார் சமூகம் பெரிதும் பாடுபடவேண்டும் என்றும் தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

சமார் 2 மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலை வெற்றிகரமாக ஏற்பாடு செய்தமைக்காக தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், மாணவர்களும் தமது நிறைந்த சந்தோசத்தையும் நன்றியறிதலையும் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் தெரிவித்தோம். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களும் எங்களுடன் மனம்திறந்து பேசினார்கள். மனம் திறந்து கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் நிலை தற்போது தோன்றியுள்ளதாக அவர்கள் மகிழ்ந்தனர். அவர்களது விருந்தோம்பலும் எங்களை அகம் குளிரச்செய்தது. தவிர, யாழ்பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் குகபாலன் அவர்களும், அவரது மாணவர்களும்கூட எம்மை வரவேற்று, தேனீர் விருந்தளித்து மகிழ்வித்தனர்.

பல்கலைக்கழகத்தை சுற்றிக் காண்பிப்பதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்வத்துடன் எம்மோடு பங்கெடுத்தனர். யுத்த சூழ்நிலையிலும் யாழ் பல்கலைகழகம் கண்டுள்ள வளர்ச்சி எம்மை அதிரச்செய்தது.

பலகலைக்கழக கலந்துரையாடலை அடுத்து, பல்கலைக்கழக மாணவர் பேரவையினர் -



எம்.ஏ.ஜப்பார் (விரிவுரையாளர்)
அரசறிவியல் பிரிவு,
சமூக விஞ்ஞானங்கள் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

சர்வதேச தமிழழ மாணவர் பேரவையினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள அந்த நிலையத்துக்கு மாணவர் பேரவையினர் எம்மை அழைத்துச் சென்ற போது, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் எம்மை இன்முகத்துடன் வரவேற்றனர். அவர்களுடனான கலந்துரையாடலில் எம்முடன் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் , தமிழீழ அரசியற்துறை மகளிர் பிரிவுத்தலைவி செல்வி கலைவிழி, நிறுவனத்தின் அரசியல்துறை சார்ந்த பொறுப்பாளர் சுதா மாஸ்டர் மற்றும் எழிலன்பன் ஆகியோரோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சார்ந்த பலரும் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறை சார்ந்த மாணவர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

விரிவுரையாளர் எம்.ஏ.ஜப்பார் எமது கல்விச் சுற்றுலாவின் நோக்கத்தினை எடுத்துக் கூறி, மனம்திறந்த ஒரு கருத்துப் பரிமாறலை எதிர்பார்ப்பதாக கூறியபோது, எங்களை அன்புக்கரம் கொண்டு வரவேற்பதாகக் கூறிய மாணவர் பேரவைத் தலைவர் எங்களைச் சந்தித்ததில் தமது அமைப்பு அளவிலா சந்தோசமடைவதாகவும் கூறினார்.

தற்போது அரசாங்கத்தால் முன்வைக்கப் பட்டிருக்கும் இடைக்கால நிர்வாகசபை குறித்து, அவர்களின் கருத்துக்களைக் கேட்டபோது- பதிலளித்த அரசியல்துறை சார்ந்த பொறுப்பாளர் சுதா புலிகளை யுத்தத்தால் வெல்லமுடியாது என்றநிலை, வந்தபோதே இலங்கை அரசாங்கம் எம்முடன் பேசவந்தது. இதுவரை பேசப்பட்டது எமது மக்களின் இயல்பு வாழ்க்கை பற்றியதே . இதுவரை அரசியற்தீர்வு பற்றிப் பேசப்படவில்லை. ஆனாலும், இயல்பு வாழ்க்கை சம்மந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை அரசாங்கம் சிறப்பாக முன்னெடுக்கவில்லை. இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிலும் கூட அரசாங்கம் எங்களை ஒதுக்கிச் சென்றது. கிடைக்கும் உதவிகளை யார் கையாள்வது என்ற பிரச்சினை வந்தபோது, நாங்கள் எங்களால் தலைமைதாங்கப்படும் ஒரு அமைப்பைக் கேட்டோம். .ஏனெனில், ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த 'சிரான்' அமைப்புக்கு எந்த அங்கீகாரமும் இருக்கவில்லை. ஆனால், அரசாங்கம் எமது கருத்துக்கு செவிசாய்க்கவில்லை. இலங்கை அரசாங்கம் எங்களை தொடர்ந்தும் ஏமாற்றும்போது, நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபையிலும் தெளிவில்லை. நாங்கள் எமது மக்களுக்காகவே போராடுகிறோம். நாங்கள் சமாதானத்தை அடைய விரும்புகிறோம் என்றார்.

முஸ்லிம்களின் நலன் குறித்து விடுதலைப் புலிகளின் கருத்துக்களைக் கேட்டபோது தாங்கள் முஸ்லிம்களை வேறானவர்கள் எனப் பிரித்துப் பார்க்கவில்லை என்றும், சிங்களவர்களால் நாங்கள் ஒடுக்கப்பட்ட வடுக்கள் நிறைய உள்ளதால், முஸ்லிம்களை நாங்கள் ஒடுக்க விரும்பவில்லை என்றும், எமது தலைவர் முஸ்லிம் தலைவர்களை அழைத்துப் பேசுகிறார். வடக்கு முஸ்லிம்களை நாங்கள் மீண்டும் அழைத்துள்ளோம் என்றும், பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அடக்கும்போது ஏற்படும் பிரச்சினைகள் பற்றி தாங்கள் நிறைய அறிந்திருப்பதாகவும், ஆதலால் இனி ஒருபோதும் முஸ்லிம்களுக்கு தங்களால் பிரச்சினைகள் ஏற்படாது என்றும் உணர்ச்சிபூர்வமாகத் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

**முஸ்லிம்களை வேறானவர்கள் எனப் பிரித்துப்பார்க்கவில்லை என்றும், சிங்களவர்களால் நாங்கள் ஒடுக்கப்பட்ட வடுக்கள் நிறைய உள்ளதால், முஸ்லிம்களை நாங்கள் ஒடுக்க விரும்பவில்லை என்றும், எமது தலைவர் முஸ்லிம் தலைவர்களை அழைத்துப் பேசுகிறார். வடக்கு முஸ்லிம்களை நாங்கள் மீண்டும் அழைத்துள்ளோம் என்றும், பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அடக்கும்போது ஏற்படும் பிரச்சினைகள் பற்றி தாங்கள் நிறைய அறிந்திருப்பதாகவும், ஆதலால் இனி ஒருபோதும் முஸ்லிம்களுக்கு தங்களால் பிரச்சினைகள் ஏற்படாது என்றும் உணர்ச்சிபூர்வமாகத் தனது கருத்துக்களை முன்வைத்தார்.**

கிழக்கில் விடுதலைப்புலிகளின் சில கீழ்மட்ட தலைவர்கள் முஸ்லிம்களை புறமொதுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள் என்ற கருத்தை விரிவுரையாளர் எம்.ஏ.ஜப்பார் முன்வைத்தபோது, கிழக்கில் சில பிரச்சினைகள் உள்ளன என்ற கருத்தை ஏற்றுக்கொண்ட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர், கிழக்கினை புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியவில்லை என்றும், புலிகளின் கட்டுப்பாட்டில் இப்பகுதி முழுவதும் வரும்போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்றும் கூறினர். கடைசிவரை முஸ்லிம்களையும் இணைத்துக் கொண்டு செல்லவே விடுதலைப் புலிகளின் தலைவர் விரும்புவதாகவும் சுட்டிக்காட்டினர். தவிர, வடக்கு முஸ்லிம்களை வெளியேற்றியது மீதான விமர்சனங்களை தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், ஆதலால் அவர்களை மீண்டும் அழைத்துள்ளோம் என்றும் கூறினர்.

தீர்வு என்று வரும்போது அது தமிழ் பேசும் மக்களுக்கானதே என்பதை சுட்டிக் காட்டிய பேரவைத் தலைவர் கஜேந்திரன் - முஸ்லிம்களிடையே ஏற்படும் ஒற்றுமையே எம்மைப் பலப்படுத்தும் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கும்போது, அதில் முஸ்லிம்களுக்கும் நியாயமான உரிமைகள், பங்கீடுகள் கிடைக்கும் என்றும், அவ்வாறே மக்கள் அங்கீகாரத்திற்கு தலை சாய்த்து எல்லாக் கட்சிகளதும் ஜனநாயக செயற்பாட்டிற்கு வழிவிட புலிகள் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

இடைக்கால நிர்வாக சபை குறித்தும் அதிலுள்ள சட்டச் சிக்கல்கள் குறித்தும் விரிவுரையாளர் ஜப்பார் அவர்கள் தெளிவுபடுத்தியபோது, இது குறித்து தமது அரசியல் சட்டவல்லுநர்கள் ஆராய்ந்து வருவதாகவும், அவர்கள் ஏற்றுக்கொண்டால் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும் ஆனாலும், தற்கால அரசியலமைப்பில் அதிகமாற்றங்கள் கொண்டு வருவதை விரும்புவதாகவும் முடிந்தவரையில் அரசியல் தீர்வை சிறப்பாக்க முயற்சிப்பதாகவும் பேரவையின் தலைவர் கூறினார்.

வடக்கு - கிழக்கு மக்களிடையே பிரதேச வேறுபாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றமை குறித்து - எமது மாணவன் அலிமுத்தீன் கருத்துத் தெரிவித்த போது, தாங்கள் பிரதேச வேறுபாட்டை காட்டவில்லை என்றும், இன்றுள்ள சிங்கள-தமிழ் முரண்பாட்டை காரணம்காட்டி கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் மக்களிடையே வேறுபாட்டை ஏற்படுத்த திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஆனாலும் இது விடயத்தில் தமது இயக்கம் தெளிவாக திட்டமிடப்பட்ட இயக்கம் என்றே தாம் கருதுவதாகவும் அரசியற்துறை சார்ந்த பொறுப்பாளர் சுதா தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் உறவை விருத்தி செய்வதில் பிரச்சினைகள் உள்ளது. அதாவது முஸ்லிம்களிடம் வரி அறவிடல், ஆட்கடத்தல் போன்றன நடந்தேறுகின்றன. உங்களின் அமைப்பு இதனை செய்யாவிட்டாலும், உங்களது அமைப்பின் பெயரால் இது நடந்தேறுகின்றது, இது சமூக மட்டத்தில் பாரிய விரிசல்களை ஏற்படுத்துகின்றது.

(அனுபவம் தொடரும்)

# கலாமணியாகத் திகழ்ந்த அமரர் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்



**மஹாவித்துவான் அமரர் வீரமணி ஐயரின் இரங்கற் கூட்டமும், திருவுருவப்பட திரைநீக்கமும் - நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

அண்மையில் அமரத்தும் அடைந்த பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அழியாப் புகழ் படைத்தவர். குடத்து விளக்காக இல்லாமல், குன்றின் மேலிட்ட தீபமென ஒளிர்ந்து குவலயம் முழுவதும் பெயர் படைத்தவர்.

விருதுகளால் விளங்குபவர் "விருதாலங்கிருத" என்று வடமொழியில் கூறுவதற்கிணங்க, தமது பெயருக்கு முன் நீண்ட பல விருதுகளைச் சேர்த்துக்கொண்டவர். அதிக விருதுகளைப் பெற்றவர்கள் வரிசையில் இவர் முன்னிலையில் திகழ் கிறார்.

விருதுகளைப் பெற்றமை மட்டும் இவரது பெருமையன்று. அத்தனை விருதுகளுக்கும் தகுதியுடையவராகத் தம்மை வளர்த்துக்கொண்டமையே இவரது பெருமையாகும்.

இசை நாடகத்துறையிலும், இலக்கியத்துறையிலும் இவரது பாண்டித்தியம் அளப்பரியது. "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனத் தமது புலமையைத் தரணியெங்கும் பயன்படச்செய்த சிறப்பை வீரமணி ஐயரிடம் நாம் காண்கிறோம்.

அபூர்வ ராகங்கள்கூட இவரிடம் விளக்கம் பெறுகின்றன. அவற்றின் நுணுக்கங்களைத் துல்லியமாக வெளிப்படுத்தி அழகுறக்காட்டுவார். யாரும் கையாளாத ராகங்களில்கூட சாகிததியங்களை உருவாக்கி, அதன் மூலம் அந்த ராகத்தை இலகுவாகவும், இசைவாகவும் வெளிப்படச் செய்யும் திறமை வியப்புக்குரியது.

அவ்வகையில் சாகித்தியகர்த்தா என்ற பாத்திரமே இவருக்கு மிகவும் பொருந்தி வந்ததாகும். மிகச்சாதாரண வாழ்த்துப்பாவிலிருந்து, நெருடலான மேளகர்த்தா உருப்படிவரை இவர் வாயில்தோன்றித் தாளில் மிளிரும்.

ஆசுகவி என்பது வீரமணி ஐயருக்கு உரிய மற்றொரு சிறப்பியல்பு. எந்த மங்கள விழாக்களில் கலந்து கொண்டாலும், உடனே ஒரு வாழ்த்துப்பாவை இயற்றி இசையுடன் பாடிக்கொடுத்து அனைவரையும் மகிழ்விப்பார். நினைத்தவுடன் கவி பாடும் அந்த வல்லமை கலைவாணியின் அருட்கொடை.

திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பாராட்டு விழாக்கள் என்றியப்படியான யாவற்றிற்கும் அவர் பாடிக்கொடுத்த வாழ்த்துப் பாக்கள் பல்லாயிரம். அவரவர் தகுதிக்கும் தேவைக்கும் பொருந்தும்படி அருமையான பாடல்களை சிலமணி நேரத்தில் யாத்து வழங்கிவிடுவார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமல்லாது, நாடெங்கிலும் உள்ள ஆலயங்களுக்கும் ஏன், அண்மைக் காலமாக வெளிநாடுகளில் உருவாகிவரும் பல நூற்றுக்கணக்கான ஆலயங்களில் இவர் பாடிய ஊஞ்சற்பாடல்கள் வருடந்தோறும் பயன்படுத்தப்படுகின்றன.

பல ஆலயங்களில் நாள்தோறும் ஒலிபெருக்கிகளில் அந்தந்த ஆலயத் தெய்வங்களின்மேல் பக்திக் கீதங்கள் ஒலிபரப்பக் கேட்கிறோம். அவ்வாறு ஒலிக்கும் பாடல்களில் அநேகமானவை வீரமணி ஐயருடையவைதான்.

பாரம்பரிய மரபுதழுவிய பிரபந்த வகைகளையும் அவர் கையாண்டிருக்கிறார். இவரால் இயற்றப்பட்டு வெளிவந்த அந்தாதிகளும், குறவஞ்சிகளும் அநேகம் - கீர்த்தனைகள், பதங்கள், தில்லானாக்கள் என இசை உருப்படிகள் பல, இவற்றில் பல இன்னும் அச்சேறாமல் இருக்கின்றன.

சாகித்திய கர்த்தாவாகிய வீரமணி ஐயரின் பெயரை நினைவூட்டிக்கொண்டு "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்", "சாரங்கன் மருகனேயும்", "மட்டுநகர் வாவியிலே கொட்டமிடும் மீனினங்களும்", "சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியும்" என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும்.

நடனக்கலைஞர் என்பது வீரமணிஐயரின் மற்றுமொரு பாத்திரம், எத்தனையோ நடனமணிகளை உருவாக்கித்தந்தவர். அவர் சிறந்த ஆசிரியர். நாட்டில் உருப்படிகள் பலவற்றை இவர் உருவாக்கி வெளிப்படுத்தியுள்ளார். பாடசாலை மாணவர்கள் மட்டத்திலிருந்து தொலைக்காட்சிவரை இவரது நாட்டிய நாடகங்கள் மேடையேறுகின்றன. 06.08.1931 இல் இணுவிலில் பிறந்த வீரமணி ஐயர், இணுவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார். தென்னிந்தியாவிலே 'கலாஷேத்ரா' என்ற உலகப்புகழ் பெற்ற நடனக் கலாசாலையில், தனது இசை, நடனப் பயிற்சியைப் பெற்றவர்.

பாரதத்தின் மூத்த கலைஞர்கள் பலருடனும் நேரடித் தொடர்புகளை வளர்த்துக்கொண்ட ஐயர் அனைவரதும் மதிப்போடு போற்றப்பட்டவர். தமிழில் மட்டுமல்லாமல் சமஸ்கிருதத்திலும் தமது கவித்துவத்தை இவர் வெளிப்படுத்தியுள்ளார். இவரது தனிப்பெரும் சிறப்பை பாராட்டிப் பல சந்தர்ப்பங்களிலும் வழங்கப்பட்ட விருதுகளில் - இயலிசை வாரிதி, நாட்டிய சாகித்திய கலாவேந்தன், சாகித்திய சிரோமணி, சிருஷ்டி ஞாயிறு, அருட்கவி வாரிதி, கலாபூஷணம, மஹாவித்வான், சம்பாதீஸ்வரர், ஞானக்கவிமணி, மூத்ததமிழ் கலாநிதி, லலிதகலா அபிஜ்ஞ, அருள் இசை வித்தகர் என்பன குறிப்பிடத்தக்க சிலவாகும்.

இவை எல்லாவற்றையும்விட, மிக உயர்ந்த விருது 'நல்ல பண்பாளர்' என அனைவராலும் ஒருமித்துப் பாராட்டப்படுவதே, யாரோடும் பகைகொள்ளாத, எந்தநேரமும் மலர்ந்த முகத்தோடு இன்சொல் பேசுகின்ற அந்த இனிய மனிதர் என்றும் எமது இதயத்தில் வாழ்கிறார்.

ப.சிவானந்தசர்மா

# மருத்துவ உதவிக்காக சென்ற அமெரிக்கக் ஹெலி வீழ்ந்தது!

## 9 படையினரும் பலி

ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு மேற்கே யுள்ள பலூஜாவில் நேற்று மாலை அமெரிக்க இராணுவ பிளக்ஹோக் ஹெலிகொப்ரர் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் - அதில் பயணம் செய்த ஒன்பது அமெரிக்கப் படையினரும் கொல்லப்பட்டனர்.

மேற்கு பாக்தாத்தில் நேற்று நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதல் ஒன்றில் ஒரு அமெரிக் கப் படைவீரர் கொல்லப்பட்டதுடன் 33 படை யினர் காயமுற்றனர்.

இதையடுத்து, அப்பகுதிக்கு மருத்துவ உதவி வழங்கச்சென்ற பிளக்ஹோக் ஹெலி கொப்ரரே வீழ்ந்து நொருங்கியது. நேற்று பி.ப 2.20 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத் தில் ஹெலியிலிருந்த ஒன்பது அமெரிக்கப் படையினரும் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க எதிர்ப்பாளர்களின் பலம் வாய்ந்த கோட்டையான பலூஜாப் பகுதியிலேயே இச் சம்பவம் இடம்பெற்றதாகவும், இதேபகுதியில் கடந்த இரண்டாம் திகதியும் சிறிய கண் காணிப்புக் ஹெலி ஒன்று சுட்டுவீழ்த்தப் பட்டதாகவும், அமெரிக்க இராணுவத்தினது பிரிகேடியர் ஜெனரல் மார்க் கிம்மிற் தெரி வித்தார்.

கடந்த மே முதலாம் திகதிக்குப் பின்னர் ஈராக்கில் நடந்த சம்பவங்களில் 346 அமெ ரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளதாகவும் ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் மட்டும் 7 ஹெலிகொப்ரர்கள் வீழ்ந்து நொருங்கியதா கவும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.



# ஈராக்கில் நடந்த தாக்குதலில் அமெரிக்க படைவீரர் ஒருவர் பலி



பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தளம் ஒன் றின் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் அமெரிக்க போர் வீரர் ஒருவர் கொல்லப்பட்டும் 34 பேர் வரை காயமடைந்துள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. ஆறு மோட்டார் குண்டுகள் இந் தத் தளத்தின் மீது ஏவப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இத்தளம் பகுதியில் இருந்து அகற்றப்பட்ட சதாமின் ஆதர வாளர்கள் 'சனி' முஸ்லிம்கள் வாழும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இதனிடையே, காயப்பட்டவர்களில் சிலருக்கு சம்பவம் நடைபெற்ற இடத்தில் சிகிச்சை கொடுக்கப்பட்டதாகவும் வேறு சிலர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.




# பூகம்பத்தில் புதையுண்டவர் 13 நாட்களின் பின்னர் மீட்பு!



ஈரானில் பாம் என்ற தொன்மையான கலாசாரங்களைக் கொண்ட நகரில் பூமியதிர்ச்சி ஏற்பட்டு, 13 நாட்களின் பின்னர் இடி பாட்டுக் கற்குவியல்களுக் குள் இருந்து 56 வயதுடைய "யலில்" என்ற ஈரானியர் மீட்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள் ளார்கள்.



புதன்கிழமை இரவு மேற் படி நபர் மீட்கப்பட்டிருந்தார். உடுப்புக்களை வைப்பதற்கு பாவிக்கப்படும் பெட்டிக்குள் சிக்கியிருந்ததால் இவரால் உயிர் பிழைத்துக்கொள்ள முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

மேலே கற்குவியல் நிறைந் திருந்ததாலும் காற்று உட்செல்லக் கூடிய இடைப்பகுதி பெட்டிக்குள் அமைந்திருந்ததால் உயிர்தப்ப முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும், மோசமான நோயுடன் அவர் இருப்பதாகவும் தெரிவிக் கப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் தனது பெயரை குறிப்பிட்ட பின் மயக்க நிலைக்கு சென்றுள்ளதாகவும் தொடர்ந்தும் அதே நிலையில் இருப்பதாகவும் பி.பி.ஸி தெரிவித்துள் ளது. தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் வைத்திய பரிசோதனைக்காக பாம் நகருக்கு வந்த நேரத்தில் பூமியதிர்ச்சிக்குள் சிக்கியதாக உதவிப் பணியாளர்கள் தெரிவித்தார்கள்.

உணவோ, நீரோ இன்றி 13 நாட்களுக்கு மேல் கற்குவியல் களுக்குள் சிக்கி உயிர் பிழைத்துக்கொள்வது ஆச்சரியமான நிகழ் வென வைத்திய அறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள்.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**மின்சார சபையினரின் தவறு**

இத்தகைய சட்டவிரோத மின்பாவனை யாளர்களின் அதிகரிப்பிற்கு இலங்கை மின் சார சபையினரும் ஒரு வகையில் காரணமா கவே உள்ளனர் என்ற கருத்தும் நிலவவே செய்கிறது.

மின்சார இணைப்புக்களை வழங்குமாறு கோரிப் பணம் செலுத்தி மிக நீண்டகாலம் சென்ற பின்னரும் மின் இணைப்பு வழங்கப் படாத பலர், இத்தகைய செயல்களில் ஈடுபடு கின்றனர் என்றும் அறியவந்துள்ளது.

கிராமப்புறங்களில் மட்டுமல்ல நகரின் சில பகுதிகளில்கூட இது பற்றிய கேள்விகளுக்கு சரியான பதில்கள் கிடைப்பதில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சாதாரணமாக ஒன்று, இரண்டு தூண் போட்டு மின் இணைப்பு வழங்கக்கூடிய இடங் களுக்குக்கூட மின் வழங்காமல் இருப்பதும் இத்தகைய செயல்களின் அதிகரிப்பிற்கு கார ணமாக அமைகின்றன. வீதிகளில் மேலதிக மான தேவைகளுக்கெனப் போடப்பட்டிருக்கும் மின்கம்பங்களே இத்தகைய ஒழுங்கைகள், வீதிகளில் இருந்து சிறிய தூரங்கள் வரையில் உள்ள வீடுகள் முதலானவற்றுக்கு மின் வழங்கப் போதுமானதாக இருக்குமென எண் ணத் தோன்றுகின்றது.

**பொதுமக்களின் கடமை**

இவ்விடயத்தில் பொதுமக்களும் விழிப் புடன் செயற்பட்டுக்கொள்வது அவசியம். சட்ட விரோத மின்பாவனையாளரால் பலர் பாதிக்க நேரிடுவதால் அத்தகைய செயல்களில் ஈடுபடு வோர்க்கு உண்மை நிலவரத்தை எடுத்துக் கூறியோ அல்லது பொலிஸாருக்கோ, மின்சார சபையினருக்கோ அத்தகையோர் பற்றி தக வல் வழங்கியோ, இத் தீயசெயலை தடுத்துக் கொள்ள முயலவேண்டும்.

இச்செயல் அனைவருக்குமே தீங்கை ஏற் படுத்தக் கூடியது என்பதால், இவ்விடயத்தில் பொதுமக்கள் அனைவரும் அவதானமாகச் செயற்படல் வேண்டும்.

கடந்த வருடம் இத்தகைய சட்டவிரோத மின்சாரம் பெற்ற இருபதிற்கும் மேற்பட்டோர் யாழ். மாவட்ட நீதிமன்றங்களில் இலட்சக் கணக் கான ரூபாய்களை அபராதமாகச் செலுத்தியுள் ளார்கள். இது அவர்களுக்குத் தேவைதானா?

எனவே, அனைவருக்குமே பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சட்டவிரோத மின் பாவனை யைத் தடுப்பது அவசியம். இதற்காக பொது மக்களும்,சமூக நலன்மிக்க இளையோரும், அத்தகைய மின் பாவனையில் ஈடுபடுவோரும் முன்வந்து செயற்படல் வேண்டும். இத்தகைய செயல்களைத் தடுப்பதோடு ஆவன செய்து கொடுப்பதில் மின்சார சபையினரும் அக்கறை கொள்ள வேண்டும். அவர்கள் விழிப்புடன் செயற்பட்டால் மின்சார சபை நட்டத்தில் இயங்குவதையும் தடுக்கலாம், அது தனியார் மயமாக்கப்படுவதையும் தடுக்கமுடியும்.

## புறூண்டி கிளர்ச்சியாளர்களுடன் அந்நாட்டு ஜனாதிபதி பேசவுள்ளார்



புறூண்டி அர சிற்கெதிராக போராட் டம்நடத்திக் கொண் டிருக்கும் தேசிய விடுதலைப் படை யினருடன் ஜனா திபதி "நியாஜி செயே" சமாதா னப் பேச்சுக்களை ஜனவரி 15 ஆம் திகதிக்கும் 20 ஆம் திகதிக்கும் இடையே நடத்து வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக எ.எப்.பி செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவ தற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ள தாக தேசிய விடுதலைப் படையின் பேச்சாள ரான "பாஷ்டர் கபிமனா" செய்தி ஸ்தாபன மொன்றுக்கு தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் எதுவித நிபந்தனைகளு மின்றி முதல் முறையாக தேசிய விடுதலைப் படையினர் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந் துள்ளதாக பி.பி.ஸி தெரிவித்துள்ளது.

புறூண்டியில் 10 ஆண்டுகள் நடைபெற்ற போரில் துட்சி, குட்டு இனங்களைச் சேர்ந்த 300,000 மக்கள் மரணமடைந்துள்ளார்கள்.

## ஊர்சுற்றி எழுதுவது

"சார்க்" மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற சந்திரிகா அம்மையார் இந்தியப் பிரதமருடன் இலங்கை சமாதான முயற் சிகள் பற்றிப் பேசியதாகவும், பாகிஸ்தான் பிரதமருடனும் கூட இப்பிரச்சினைகள் பற்றிப் பேசியதாகக் செய்திகள் தெரிவிக் கின்றன.

இந்த நாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடானாலும், அதிகாரிகள் மட்டத்திலான மாநாடானாலும் நம்ம நாட்டில் அரசியல் கட்சிகள் கூட்டும் ஆண்டு மாநாடுகள், தொழிற் சம்மேளனங் களின் மாநாடானாலும் முக்கிய கூட்டம் முடிந்தபின் ஊர்சுற்றிப் பார்த்து, கொஞ்சம் ஓய்வாகக் கும்மாளம் போடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுவது வாடிக்கை.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாரம்பரிய ஆடைகளைத் தங்கள் பாரம்பரியத்திற்கு அணிந்து திரியாமல் உடலுக்குக் கொஞ்சம் ஆறுதல் கொடுக்கக் கூடிய உடைகளை யும் இம் மாநாடுகளில் கலந்து கொள்ப வர்கள் அணிந்து கொள்வர்.

கடைத் தெருவுக்குப் போய் விரும்பிய பொருட்களையும், இவர்கள் கொள்வனவு செய்வர்.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு கொழும்பில் நடந்தபோது, சர்வதேச நாடா ளுமன்ற அமைப்பின் மாநாடு நடந்த போதும், வெளிநாடுகளில் இருந்து வந்தி ருந்த தலைவர்களும் அவர்களின் உதவி யாளர்களும் கடைத்தெருவுக்குப் போய், நம் நாட்டுப் பொருட்களை வாங்கிச் செல்லவில்லையா? பாகிஸ்தானிலும் வெளி நாட்டுத் தலைவர்கள் இப்படிச் சென்று, பொருட்களை வாங்கிச் சென்றனர்.

சந்திரிகா அம்மையாரும் கடைத் தெருவுக்குப் போய் ஆசைப்பட்ட உடுதுணி களை வாங்கினார். சில நகைகளும் வாங் கினாராம்.

உடு துணிகளும் நகைகளும் சந்திரிகா வாங்கக் கூடாதா?

இலங்கையில்தான் கொழும்பிலும் சரி வேறு இடங்களிலும் சரி அவர் பயமில்லா மல் போகமுடியாமல் இருக்கிறார். அவரது மாளிகைக்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு ஹோட்டலில் புலிகளின் புலித்தேவன் வந்து தங்கியிருப்பதாக கேள்விப்பட்டே பயந்து போனவர் ஜனாதிபதி சந்திரிகா.

இப்படி எந்த நாளும் பயந்து, பயந்து தமது மாளிகைக்குள்ளும், வீட்டுக்குள்ளும் எத்தனை வருடங்களுக்குத்தான் முடங் கிக் கிடப்பது? நாட்டில் எல்லா இடங் களுக்கும் சுதந்திரமாக அச்சம் இல்லாமல் சென்று, அங்குள்ள கடைகளுக்கும்போய் விரும்பிய பொருட்களை வாங்கவேண்டும் என்ற ஆசை அம்மையாருக்கு இருக்காதா, இருக்கக்கூடாதா?

சிறு வயதில் கொன்வென்டில் படித்த போது மிட்டாய்காரரிடமோ, ஐஸ்கிறீம் காரரிடமோ சகபிள்ளைகளுடன் சேர்ந்து மிட்டாயோ, ஐஸ்கிறமோ வாங்கி சுவைத் திருக்க மாட்டாவா?

இந்த ஆசையில் அம்மையார் மற்ற பெண்களைப்போல் பாகிஸ்தானில் ஜீன்ஸ் போட்டுக்கொண்டு, போயிருக்கிறாவாக் கும். இதை ஒரு புகைப்படக்காரர் எடுத் திருக்கிறார்.

இந்தப் படத்தில் ஒன்றை ஒரு பத்தி ரிகை வெளியிட்டிருக்கிறது. வேறு பத்திரி கைகளும் இனி இதைச் சமயம் பார்த்து பிரசுரிக்கக்கூடும்.

இந்தியப் பிரதமராக இருந்த ஜவ கர்லால் நேரு ஒன்றன் பின் ஒன்றாக சிகரெட் புகைப்பாராம். அவரது மகளும் இந்தியாவின் வீராங்கனை எஎ்று வர்ணிக் கப்பட்டவரும், பிரதமராக இருந்தவருமான இந்திராகாந்தியும் ஒன்றன் பின் ஒன்றாக சிகரெட் புகைப்பாராம்!

நேருவோ, இந்திராவோ சிகரெட் புகைத்தபடி எந்தப் பத்திரிகையிலாவது புகைப்படம் வந்ததை மக்கள் கண்டிருக் கிறார்களா?

தலைவர்களை பத்திரிகைகள் பாது காத்துக் கொள்கின்றனவாம். கொழும்புப் பத்திரிகைகள் தங்கள் தலைவர்களையும், பாதுகாக்கக் கூடும்.

ஆனால், தமிழ்த் தலைவர்களைப் பற்றி எப்படியெல்லாம் எழுதிக்கொண்டிருக்கின் றன?

இரண்டு ஆங்கில தினசரிகள் இன்ன மும் புலி எதிர்ப்புப் பிரசாரத்தை விடுவ தாக இல்லை. சிங்கள தினசரிகள் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

இதற்கு காலம் பதில் சொல்லும்!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## குடாநாட்டு நிலைகுறித்து மதிப்பீடு செய்ய

# ஜப்பானிய அதிகாரிகள் குழு 23 ஆம் திகதி யாழ்.வருகை!

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை கொண்ட குழுவொன்று எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது. பத்துக்கும் மேற்பட்டவர்களை கொண்ட இக்குழுவினர் இங்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், அரச அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பின்னர் குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் குழுவினர் இங்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்டுகின்றது.

இப்பிரதிநிதிகள் அரச அதிபர், யு.என். எச்.சி.ஆர், ஜி.ரி.இசற், யு.என்.டி.பி, ஆகிய நிறுவனப் பிரதிநிதிகளையும், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், பொலிஸ் ஆகிய தரப்புக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்தக்குழுவினர் விடுதலைப் புலிகளையும் சந்தித்துக் கலந்துரையாடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)



### நாற்சந்தி

"சார்க் மாநாட்டுக்குப் போன சனாதிபதி சந்திரிகா பயங்கரவாதத்தைப் பற்றி மட்டும் பெரிதாகக் கதைத்துவிட்டு 'சாறிகள், அதுதான் சீலைகள், நகைகள், அலங்காரப் பொருட்கள் எல்லாம் கொள்வனவு செய்துகொண்டு வந்திருக்கிறாராமே....!

"நல்லவேளை அங்கை போய் பல்குழல் எறிகணை செலுத்திகள், ஆயுதங்கள், எறிகணைகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யேல்லை.... பயங்கரவாதம் பற்றி பயமுறுத்திவிட்டு பாதுகாப்புக்கென ஆயுதங்களைக் [illegible]கேல்லை.... அந்தளவிலை தப்பித்தோம்...."

"ஏன் இந்தியாவிட்டை ராணுவ உதவிகள்.... பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தெல்லாம் பேசித்தானே இருக்கிறா.... இலங்கைப்பிரச்சினையிலை இந்தியாவின் நிலைப்பாடு மாறியுள்ளது என்றுமெல்லே அம்மணி கூறியிருக்கிறா....

'அம்மணி அப்படிக்கூற, அமெரிக்கா வேறொன்றையெல்லே கூறப் போகுது போலை கிடக்கு.... விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தொடர அமெரிக்காவுக்கு விருப்பமில்லை என்று அமைச்சர் மகேஸ்வரனிட்டை.... அமெரிக்க தூதரக அதிகாரி சொன்னதாக ஒரு பேப்பரிலை கிடந்தது பார்க்கேலையோ....!

"எல்லாம் அரசியல்தான் மணியம்.... ஆளுக்காள் அறிக்கைவிட்டே ஆளைக் கொன்று போடுவாங்க போலை இருக்கு....

"அதுசரி கனகு.... பாகிஸ்தானிலை அம்மணி சீலை வாங்கப் போகேக்கை போட்டிருந்த உடையைப்பார்த்தியே....!"

"ஓமோம் வாங்கிறது தேசியம்.... உடுக்கிறது விதேசியம்"

"ஏன் மிச்சத்தையும் சொல்லி முடியன்.... பேசுறது சர்வதேசியம் கடைப் பிடிக்கிறது சிங்கள தேசியம் என்று...."

தெருவோடி

### பிரதமர்....

உடன்பாடு குறித்த உண்மையான விபரங்களைபிரதமர் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

பிரதமர் ரணிலுக்கும், புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையானது புலிகளை பலப்படுத்துவதற்கே உதவியது.

தற்போதுள்ள சூழ்நிலையில் புலிகளுடனான யுத்தநிறுத்த உடன்பாட்டின் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடாகும். இந்த விடயத்தில் மக்களின் தீர்மானம் என்ன என்பதனை ஜனாதிபதி காண்பிக்க வேண்டுமென்று விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

### சமாதானத்தை

காப்பு அமைச்சு இணக்கப்பாடு காண்பதற்கான சூழ்நிலை இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் அனைத்திலும் பாதுகாப்பு அமைச்சர் சாதூரியமாகச் செயற்பட்டு சுமூகநிலையை உருவாக்கியதாக ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் கூறினார்.

### மலசலகூடக்....

இந்த மலசலக்கூடக்குழிக்கு 10 மீற்றர் தூரத்தில் இராணுவத்தினரது பாதுகாப்பு அணை இருந்தமைக்கான அடையாளம் காணப்படுகின்றது.

இந்த மலசலகூடக்குழியிலிருந்து கிழிந்து அழிந்த நிலையில் உடைகளும் மீட்கப்பட்டுள்ளன. (ப)

## சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க

# அரசு நடவடிக்கை எடுக்காததால் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

சம்பள முரண்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் இதுவரை தமக்கு எந்தவித தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்பதை வலியுறுத்தி சுகாதார சேவை தொழிற் சங்கக் கூட்டமைப்பு நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியது.

மருத்துவர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக எடுத்த நடவடிக்கையைப் போல் தமது பிரச்சனை தொடர்பாகவும் மேற்கொள்ள வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சுகாதார சேவையில் நிலவும் முரண்பாடுகளை நீக்குமாறு நாம் கோரிக்கை விடுத்து சுமார் ஆறு மாதங்களாகின்றன. இக்காலப் பகுதியில் அரசாங்கத்திற்கோ அமைச்சரவைக்கோ இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சந்தர்ப்பம் எதுவும் கிடைக்கவில்லை. மருத்துவ சேவைக்கு ஒரு கொள்கையையும் சுகாதாரசேவைக்கு மற்றுமொரு கொள்கையையும் வைத்திருக்கும் அமைச்சரவை முரண்பாட்டால் தான் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நிலவுகின்றதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

இந்தவிடயம் குறித்து சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்ட சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு தாம் திறைசேரியுடன் இந்த மாதம் 12 ஆம் திகதி பேச்சு நடாத்த இருப்பதாகவும்,

இப்பேச்சு வார்த்தைகளில் முன்வைக்கப்படும் யோசனைகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

### இணக்கப்பாட்டுடன் செயற்படக்கோரியுள்ளார் ஆனந்தசங்கரி

நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமானால் ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணில் விக்கிரசிங்கவும் ஒருமைப்பாட்டுடன் செயற்படவேண்டுமென - தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அரசியல் வேற்றுமைகளை மறந்து நாட்டின் இனப்பிரச்சினைகளைத் தீர்க்க பரஸ்பர ஒத்துழைப்போடு இருவரும் செயறபடவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.


விசேட அறிவித்தல்

A/L 2006

நாளை ஆரம்பமாகும் இவ்வகுப்பிற்கு அனைவருக்கும் அனுமதி வழங்கப்படும். இருப்பினும் இதுவரை அனுமதி பெறாதோர்

உங்கள் அனுமதியை உறுதிப்படுத்த

15 நிமிடங்கள் முன்னதாக சமுகம் தரவும்

DMI யாழ்.நகர்

(சி-2076)


# பாதுகாப்பு அமைச்சு...

எதுவும் முறிவடையவில்லை. இது தொடர்பான புதியசுற்றுப் பேச்சுவார்த்தை இந்தமாத இறுதிக்குள் மீளத் தொடங்கும்.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சை நான் பொறுப்பெடுத்த காரணத்தால் தான் - சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்பட்டதெனவும், தன்னால் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச்செல்ல முடியவில்லை என பிரதமர் ரணில் கூறுவதில் எவ்வித அர்த்தமும் இலலை.

ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மைபெற்று அரசாங்கம் அமைக்க முன்வந்தபோது, அவருக்கு நான் பாதுகாப்பு அமைச்சை கொடுத்தது தவறு. ஆனாலும், நான் அதனை வழங்கினேன.

தற்போது, அரசியல் யாப்பின்படியேதான் நான் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்தேன். அத்துடன் அரசியல் யாப்பின்படி ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சு உட்பட சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சை வைத்திருப்பதற்கு எனக்கு எவ்வித ஆர்வமும் இல்லை. ஆனால், சில பிழையான நிர்வாக நடவடிக்கைகளினாலேயே நான் மீளவும் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்தேன்.

கடந்த வருடத்திலிருந்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இது தொடர்பாக எனக்குப் பிரச்சினை ஏற்படத் தொடங்கியது. ஆனால், இது தொடர்பில் பல சமரச முயற்சிகளுக்கு நான் அவருடன் இணங்கி வந்தேன்.

அத்துடன், எவ்வாறு இருவரும் கூட்டாக இணைந்து செயற்படுவது பற்றியும் பல தடவை பிரதமருக்கு எடுத்துக்கூறினேன்.

ஆனால், அவர் ஒன்றிலும் திருப்திப்படவில்லை. இருந்தாலும் இது தொடர்பில் இப்போதும் நாம் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம்.

நாட்டில் இரண்டு பெரிய கட்சிகள் உள்ளன. இதில் ஒன்றுக்கு ரணில் தலைவராக உள்ளார். இந்த இரு கட்சிகளும் கூட்டாக இணைந்து செயற்படும் என்ற நம்பிக்கை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளது.

இந்த இரு பெரும் கட்சிகளும் நாட்டில் இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை இதுதான் முதற்தடவை. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி இதற்குத் தயாரில்லை. இரு கட்சிகளும் இணைந்து செயற்பட்டாலே நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இதைவிடுத்து ஒரு கட்சி உடன்பட, மற்றைய கட்சி மறுத்து எதிர்ப்பாக நின்றால் இதனைச் செய்ய முடியாது.

விடுதலைப் புலிகள் என்ன சொல்வார்கள் என்பது ஒருவருக்குமே தெரியாது. கடந்த இரண்டு வருடமாக அவர்கள் போருக்கு திரும்பிச்செல்லவில்லை. ஆனால், சமஷ்டி தீர்வு தொடர்பில் தாங்கள் மிக ஆர்வமாக இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், சமஷ்டியை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற சரியான தகவல் எதனையும் அவர்கள் தரவில்லை. ஆனாலும், இந்த சமஷ்டி என்பது அவர்கள் கேட்கும் தமிழ் ஈழத்திற்குரியதுதான்.

இருந்த போதிலும், சமஷ்டி என்ற நிலைககு அவர்கள் வந்தது நல்ல அறிகுறிதான். என்றாலும், அவர்கள் தமது படைப்பிரிவை தொடர்ந்தும் உயர்த்திச் செல்வது மிகவும் மோசமான அறிகுறி எனவும் அவர் தெரிவித்தார்.


பதவி வெற்றிடம்

☆ சிற்றூழியர் (ஆண்கள் மட்டும்)
☆ பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள் மட்டும்)
☆ பக்க வடிவமைப்பாளர் - Page Maker
(இருபாலாரும்)

மேற்படி விண்ணப்பங்களுக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சான்றுப் பத்திரங்களுடன் 'நமது ஈழநாடு' அலுவலகத்திற்கு கடமை நேரத்தில் நேரடியாகச் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
இல, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்



நாளை ஆரம்பம்!

A/L 2006

(கலை, வர்த்தக பிரிவுகள்)

காலை 8 மணி

DMI யாழ்.நகர்

(சி-2057)



பொருளியற் கல்லூரி

பெருமாள் கோவில் அருகில்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

இணுவில் மத்திய கல்லூரி
அருகில்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்

A/L 2006 கலை, வர்த்தகம்

மீண்டும் ஓர் புதிய பிரிவு

ஆரம்பம் 10 – 01 – 2004 சனி

| A/L 2006 | யாழ். நகர் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P. சர்மா | R.P. சர்மா |
| நாடகமும் அரங்கியலும் | சுகந்தன் | சுதன் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

யாழ். நகரில் கலைப் பிரிவு - 9.00 A.M
வர்த்தகப் பிரிவு -10.00 A.M
இணுவில் கலைப் பிரிவு - 9.00 A.M
வர்த்தகப் பிரிவு - 3.00 P.M

A/L 2005
பேரிணப் பொருளாதாரம்
S. வரதராஜன் B.A (HONS)

ஆரம்பம் - 10 - 01 - 2004 சனி
யாழ். நகரில் - காலை 10.00 மணி
இணுவில் - மாலை 4.00 மணி

(சி/2077)


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.